U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

# பெரியர் அற்புதத்திரட்டு.

# சைவசித்தாந்த நவநீதம்.

என்னும் இந்நூல் இரண்டும்வசனநடையாகப்

பொன்னைமாநகரம்

கவிராஜ அழகியநம்பியாபிள்ளையவர்கள் குமாரர்

ஆரியங்காவுப்பிள்ளை,

எழுதியவை

திருநெல்வேலியிலுள்ள பெரியோர்கள்

உத்தரவுப்படி

திருநெல்வேலி

ஆரியப்பிரகாசினி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1893 ரிஜிஸ்தர்

# முகவுரை.

உலகெல்லாம் நவகண்டமெனப் பகுக்கப்பட்டவற்றுட் சிறந்த இப் பரதகண்டத்தில் விள பூர்வ கிரந்தங்கள் பலவற்றுள்ளும் காரணப அற்புதசரி ங்களும் சைவசித்தாந்த நவநீத முறைமை றுணர்ந்த பெரியோர்களுக்கே உரிமைபூண்டு நிகழ்கின்றன.

தற்காலத்திற் சிலர் அவற்றின் உண்மையைத் தெளியத்தக்க பக்தி ஒழுக்கப்பெருமையின் அவற்றை ஐயப்பாட்டின்கட்படுத்தித் தமது புல்லறிவைப் பேரறிவெனக் காட்டாநிற்பர்.

அந்தோ இது கலியின் கொடுமையே அப்புராண சரிதங்கள் கால நிபந்தனை கடந்தவையாதலின் இவர்சிற்றறிவுக்கு விஷயமாகாதென்பது சத்தியம்.

ஆயின் இப்புத்தகத்தில் அடங்கிய பிரத்யக்ஷதுல்யமாய்ச் சமீப சம்பந்தமான சரிதங்களையேனும் கற்றுணர்ந்தடங்க வேண்டி இஃது இயற்றப்பட்டுள்ளது.

இச்சரிதங்களில் உண்மைக்கு மாறான விஷயம் ஒன்றும் எய்துவதின்றென்பது எமது துணிபு.

இதில் விளக்கிய சைவசித்தாந்த நவநீதமும் எளிதிற் பயன் பெறத்தக்கதே செய்யுள் நடை பெரும்பாலார்க்கு விளங்காமைபற்றி வெளிதி லுணரத்தக்கவசன நடையே இதற்குரித்தாக்கப் பெற்றது.

எமது புல்லறிவும் இதனை வெளியிடும் அவாவும் ஒன்றுகூடவே விளைவியற்ற நேர்ந்த இந்நூலில் சொற்குற்றம் பொருட்குற்றம் பல காணப்படுதல் இயல்பே.

ஆயினும் குணசீலர்களுக்கே இது உரித்தாமாதலின் அக்குற்றங்களும் குணத்தின்பாற்படுமெனக் கருதி நிற்கும்.

ஊழியன் ஆரியங்காவு.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41

# பெரியர் அற்புதத்திரட்டு.

## (1) முதலாவது

### வசித்தாந்தமே சமையமென்பது.

---

### சனகன் மயக்கநீர்ந்த அற்புதம்.

உலகெலாமகிழ்த்தகக வளம்பொருந்திய மிதுலா புரியென்கின்ற பட்டணத்தில் சகலசீலங்களு நிறைந்த சனகமகாராஜனென்பவன செங்கோல்செலுத்தி வருங் காலத்தில் ஒருநாள் அவனிடத்திற்கு நாரதமகாமுனிவர் வந்தனர்.

அக்காலத்தில அவன் பரத்துவவுண்மையை யறியாதவனாய்த் தனது பகன் சென்றவழியே மனஞ்செலுத்தி யிருவினைகளையும் விடாமற் புசித்துத்தானே பரத்துவமென்னு மதியில்லையால் அந்நாரதமுனிவருக்கு வழிபாடு செய்யாதவனாகி யிருந்தனன்.

அதை அம்முனிவர்கண்டு அவன் அறிவின்மையை வெளிப்படுத்தாமல், அரசனே! பகவானுடைய திரு

யையிஞலே சகலபாக்கியங்களும் பெற்றனை. இன்
னும் அச்செல்வத்தை உனக்கு வேண்டியமட்டும் அப்
பகவான் அளித்தருளக் கடவரென்று ஆசீர்வதித்தனர்.

அதை அவ்வரசன் கேட்டு, முனிவரே! பகவான்
இருக்கின்றனரென்றும் அவர் வேண்டிய பாக்கியங்க
ளை அளிப்பரென்றும் பேதப்படுத்திச்சொல்வது அறிவில்
லாதவர்களுடைய தன்மையேயன்றி அபேதிகளாயிருக்
கின்றவர்களுடைய தன்மையன்று. யாவையுங் கொடுக்
கின்ற பகவானும் அவைகளையேற்றுக்கொள்கின்ற யாச
கனும யாவையும் அநுபவிக்கின்ற போகியும் அவைகளை
க்குற்றமாக வெறுக்கின்ற யோகியும் நானேயன்றி வே
றில்லையென அவமதித்துரைத்தனன். அதை அம்முனி
வர் மறுத்து, அறிவற்ற சகல ராஜனே! பகவான் வேறில்
லையென்று பேதைமையாற்பேசினை. அப்பகவான் உ
ண்டென்பதை நீ நாணங்கொள்ளும்படி உன் எதிரிற்று
னே காட்டுகின்றேம். அப்போதேனும் அறிந்துகொ
ள்ளக்கடவையென்றுரைத்து அவ்விடத்தினின்று நீங்கிக்
கவுண்டின்னிய முனிவரிடத்திற் சென்று அவ்விடத்
தில் அவரோடு கலந்துகொண்ட பின்னர் நாரதமுனிவர்
எழுந்து அக்கவுண்டின்னிய முனிவர் பூசிக்கின்ற விரா

யகமூர்த்தி சந்நிதானத்திற்சென்று சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து அவர்பேரருளைப்பாடித்துதித்து, சுவாமீ! கிருபையால் சனகராஜனுக்குப் பூலோக அரபோக்கற்கரிய செல்வமும் உண்டாயிருக்கின்றன. அவன் அவைகள் தேவரீர் கிருபையாற்கிடைத்தனவென்று சற்றுங்கருதிலன். இவன் தேவரீரைப் பரத்துவமென்று எண்ணிலன். பெரியோர்களைக் கண்டால வந்தனைவழிபாடுகள் செய்யாது தானே பரத்துவமாக மதித்து அகங்கரித்திருக்கின்றனன். அவைகளைத் தேவரீர் திருமுன்பு விண்ணப்பஞ் செய்துகொள்ளுமாறு வந்தனனென்று சொல்லியீண்டும் சாஷ்டாங்கமாகச் சேவித்து ஆகாயமார்க்கமாகச் சென்றனர்.

பின்னர் அவ்விநாயகக்கடவுள் அச்சனகராஜனது மையலை நீக்கி ஆட்கொள்ளுமாறு திருவுளங்கொண்டு தொழுநோய்கொண்ட சரீரத்துடன் ஓர் அந்தணராக வெளிக்கொண்டு பசியையும் உடைத்தானவர்போல அவ்வரசனிடம் சென்றனர்.

அரசன் அவரைப்பார்த்து உமக்கு யாதுவேண்டி வந்தீரென்றுவினவ வேதியர்சொல்லுவார், அரசனே! முன்ன

ர் எனது பசிநோய் நீக்குமாறு அமுதூட்டல் வேண்டுமென்றனர்.

அரசன் தனது குமாரனையழைத்து அப்பிராமணருக்கு அமுதூட்டும்படி உத்தரவுசெய்தான்.

அரசகுமாரன் விநாயகமூர்த்தியாகிய பிராமணரை வீட்டினுள் அழைத்துக்கொண்டுபோய் வேண்டிய சிற்றுண்டிகளுடன் அமுதுபடைத்து இனிதேவரீர் அமுது எடுத்தருளவேண்டுமென்று உபசரித்து இரந்தனன்.

பின்பு அவ்வேதியர் அவைகளைத் தொட்டமாத்திரத்தில் இலைகளில் ஒன்றுமில்லாதிருக்க அருந்தினர்.

அதுகண்டு சமையற்காரர் சமைத்திருக்கின்ற எல்லா உண்டிகளையுங் கொணர்ந்து படைத்தனர். படைக்குந்தோறும் அவர்கள் காணும்படி உடனுக்குடனே உட்கொண்டார். அது கண்டு சமையற்காரர் அரசகுமாரனை நோக்கி யாங்கள்சமைத்து வைத்திருந்த எல்லா உணவுகளையும் படைத்தாய்விட்டது. இன்னும் அரைக்கணப்போது பொறுத்திருந்தால் அவற்றஉண்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

டிகளைச் சமைத்துக்கொண்டு வருகின்றேமென்றார்கள்.

யந்தணராய்வந்த எமது கர்த்தன் செவியுற்றுந் தமது திருமுடியைசதுளக்கி இனி வெந்தபின்பு பசியை விலக்குவது நிற்கட்டும. இப்போது வேகாதிருக்கின்றவைகள் எவற்றையுங் கொண்டுவந்து விரைவிற் படையுங்களென்றனர்.

அதற்கு அவ்வரசகுமாரன் அதிசயித்து இவர்க்கு அப்பண்டங்களை அடிக்கடி யெடுத்துவந்து படைப்பது அரிதென்றெண்ணி, அந்தப் பதார்த்தங்களை வைத்திருக்கின்ற எல்லாக் களஞ்சியங்களையுந் திறந்து, சுவாமீ! இவைகளிற் புகுந்து உமக்கு வேண்டுவன புசித்தருளுவீரென்றனன். அப்படியே யாவையும் புசித்தருளினர்.

இவ்வற்புதத்தைச் சனகராஜன் கேட்டு எழுந்துவந்து கர்த்தன் திருவிளையாடல்களைப் பார்த்து அந்த நகரத்திலுள்ளனவும் நாடுகளிலுள்ளனவுமான பதார்த்தங்களையெல்லாம் மனோவேகமாகச்சென்று கொண்டுவருவதாகத் தூதர்களுக்கு ஆக்கியாபித்தனன்.

அத்தூதர்கள் அக்கட்டளையை ஆங்காங்கிருக்கின்ற

எல்லாச்சனங்களுக்கும அறிவிக்க அவ்வைாகன் வெந்த
தும் வேதாந்தமாயுள்ள அளவற்ற பதார்த்தங்களைகொ
ண்டுவந்து மலைபோலக்குவித்தாகன்.

அப்பதார்த்தங்களை யெல்லாம் அரசன்காணும்படி
முன்போலவே உண்டருளினா அதுகண்டு அரசன்மன
ங்கலங்கி இவனை நல்லகாரத்தையினல் வெளிப்படுத்
துவதே நலமென்று யோசித்து ஒருவிண்ணப்பஞ்செய்
தனன், எப்படியெனில் எங்குமுள்ள பதார்த்தங்களை
யெல்லாம் வரவழைத்துத்தந்தும் உமது பசிநோய்தணி
ந்ததில்லை. இனி அந்தக்குறையை நீக்கத்தக்கவர்களி
டத்தில் எழுந்தருளலா மென்றுசொன்னன.

அதைக்கேட்ட கர்த்தன் ஆ! அட! அரசனே! உன
துசெயல் மிக்க அழகாயிருக்கின்றது. எல்லையற்ற பதா
ர்த்தங்களை இமைக்குமுன ஆக்கவும் அழிக்கவும் வல்ல
ஒன்றான பிரமம நீயேயாகில் உன்னையாசித்துவந்த என்
பசியை நீக்காமல் இலலைப்போமென்றுரைப்பையோ"
சவதற்கிடமின்றி அல்லற்படுகின்ற நீயோ பிரமமாவாய்
உனதுபிரமத்துவத்தை நெருப்பிற் போடென்று சொல்
லிக் கோபித்து அவ்விடத்தினின்று நீங்கி அரமனை

வாயிலைக்கடந்தனர்.

...ல் வீதியிற்சென்ற பிராமணராகிய விநாயக க்கடவுளவர் அக்கிரகாரத்தின்கண் வேதவொழுக்கங் களிற்சிறந்த திரிசிரனென்னும் ஒரு ஏழைப்பிராமண ன் வீட்டினுட்பிரவேசித்துச் சனகரால் நடந்த காரியங் களையெல்லாம் அறிவித்துத் தமது பசிநோய்தணியும் பொருட்டு உன்னிடத்தில் வந்தோமென்றனர்.

அதைக்கேட்ட திரிசிரன் பத்தினியாகிய விரோச னையென்பவள், சுவாமி! நேற்றைவரையில் யாசகத்தாற் கிடைத்ததைப் புசித்திருந்தோம். இத்தினம் அதுவுமின் றியிருக்கின்றோம். கணேசனைப்பூசித்ததுபோக மீதி யான ஒரு அறுகுமாத்திரமிருக்கின்றது. வேறொன்று மில்லையென்றனள்.

அதற்கு விநாயகக்கடவுளாகிய வேதியர் அதுவே யெனக்குமகாபாக்கியமாகும். அதனையன்புடன் கொ ண்டுவந்து அளிப்பீராகவென்று திருவாய்மலர்ந்தனர்.

அவ்வாறே விரோசனை அவ்வறுகைநீட்டக் கரத் தினால் வாங்கிமென்று தின்று ஏப்பமிட்டனர். அக்கியி

டத்தில் கணேசமூர்த்தி திருவருளால அவர்கள் கூரை
வீடு வேலையாடிய பண்டபாத்திரசதங்களெல்லாம் நிறைந்த
தங்கமயமான மாளிகையாய்விட்டது. மிதிலாபுரியினு
ம் அதைச்சேர்ந்த நாட்டினுமுள்ள யாவர்களும் முன்னர்க்
கொண்டிருந்த இழந்தபண்டங்களெல்லாம் ஒன்று நூறா
யின. அவ்வற்புதத்தைக் கண்டவர்களெல்லாம் அதிசய
மடைந்தார்கள்.

திரிசிரனும் விரோசனையும் முழுதாங் கடைத்தே
றுமாறு தொழுதேத்திக்கொண்டு அறிந்து நின்ற அந்த
ணரானவா அவ்விருவருக்கும் சாதா திவ்வியமங்கள
சொரூபந் தோன்றும்படியாகப் பிரத்தியக்ஷமாகி நின்ற
னர்.

உடனே யவ்விருவர்களும் அடியேங்கள் இப்பிர
பஞ்சவாழ்க்கையை வேண்டுகிலம் தேவரீர் திருவடி
நீழலிலிருக்கத்தக்க பேற்றினையளித்தருள வேண்டுமென
று பிரார்த்தித்துக் கொண்டனர். அந்த விநாயகக்
கடவுள் அருள்கூர்ந்து உமக்கு அந்தியகாலத்தில் அவ்வா
றேயளிப்போமென்று திருவாய்மலர்ந்தருளினர்.

இப்படித் திரிசிரன் வீட்டில் நடந்தவைகளையும்

தனது சகாக்களிலும் நாட்டிலுமுள்ளவர்கள் முன் கொண்
டு ... ந்தபண்டங்களை ஒன்றுறாக மறுபடியுமன
டா... ...ழைதயும சனகாசனர் கேள்விப்பட்டுத் திரிசி
ரன் வீட்டில் திவ்வியங்களை செருப்பா யெழுந்தருளி
யிருந்த கணேசமூர்த்தி சந்நிதானத்தில் வந்து சாஷ்டாங்
கயோகவிழுந்து நமஸ்கரித்து அநேகதோத்திரஞ்செய்து
நாரத முனிவர் கூறிய நமோ நாகஸகன்ச சிறிது முண
ராகிருந்த சிறியோனைக் கண்டு கருணையுண்டாம் தேவ
ரீருடைய வினயவைஞானத்தை அடியேன் தெளியும்படி
யாக அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்
தான்.

அதற்குக்கணேசமூர்த்தி திருவைபஞ்சாக்ஷர பதிபசுபா
சமென்னும் சித்தாந்த முறையை வெளிப்படுத்தி ஆகம
முறைப்படி தீட்சைசெய்து உபதேசித்தருளினார்.

அந்த உபதேசத்தையடைந்த சனகன் இது நாரத
முனிவரால் வந்தபேறல்லவோவென்று நினைந்து நினைந்து
உருகி யாவருமெச்சுஞ்ஞானியென்று சொல்லும்படி யாக
உலகத்தைக்காத்துச் சீவன் முத்தனாயிருந்தான். இதை
யெல்லாம் பார்க்கவ புராணம் தானையயாசகபட்டவத

னைப் பார்த்தால் விவரமாயுந் தெளிவாயுமறியலாம.

சனகனே மகாவாக்கியத்தின் கருத்தறியாம லஞ் ஞி தானே ஒன்றான பிரமமென்று அகங்கரித்திருந்த மாயாவாதம் கணேசமூர்த்தி போதனையால் நீங்கி உண்மையாகிய பதிபசுபாச முறைமையில் திரும்பி சைவன்முத்தன் ஆனனென்றறிகின்றோம்.

அன்றியும் மாணிக்கவாசகரும் புத்தர்களும் சமயவாதஞ் செய்யுங்காலத்தில் புத்தர்கள் மாணிக்கவாசகர் சொல்லும் நியாயத்தை ஒப்பி அடங்காமல் முரட்டாட்டமான வார்த்தைகள் மறுத்து மறுத்துப் பேசியதனால் மாணிக்கவாசக சுவாமிகள் கோபத்துடன் சரசுவதியை நோக்கி நீ இந்தப்புத்தர்கள் நாவிலிருப்பதனாலல்லவா இப்படி முரட்டாட்டம் பேசுகிறார்கள். ஆகலால் அவர்கள் நாவிலிருந்து இறங்கிவிடென்று உத்தரவுசெய்யவே சரசுவதி புத்தர்கள் நாவை விட்டிறங்கிவிட்டனள். புத்தர்களெல்லாம் ஊமர்களானார்கள். இவ்வளவு வல்லமையும் பொருந்திய மாணிக்கவாசகரும் பிரமம்வேறிருக்கிறதென்று அதைநோக்கி, "நாயிற்கடையாம நாயேனை கடைத்து, நீயேயாட்கொண்டாய்" என்று கெஞ்சி இரக்

ரா அக்கினி விண்ணப்பஞ்செய்து தோத்திரித்திருக்கிறார்.

யெல்லாம் சாதியாமல் கைவல்லியத்தையும் வாசகஞானத்தையும் பார்த்து அந்நூல்களின் கருத்தையும் உணராமல் ஒரு குருடனுக்கு மற்றோர் குருடன் வழிகாட்டுவது போலப் போதிப்பவர்களின் போதனையைக் கேட்டு தானே பிரமமென்று நிச்சயித்து அகங்கரித்துக்கொண்டிருக்கின்ற மாயாவாதிகளைப்பற்றி யென்னசொல்லலாம்.

அவர்கள் பேரில் அந்தக்கடவுளே மனதிரங்கி உண்மைஞானத்தைக் கட்டளையிட்டருள வேண்டும்.

## இரண்டாவது.

சைவ சித்தாந்திகளாயிருப்பவர்கள் தவத்தையடைவதற்கு முதலாவது விரதாதிகளை யனுசரித்து வந்தால் தவம் நாளுக்குநாள் செனனந்தோறும் பிறை போல வளர்ந்து வருமென்பதை யிதனடியிற்சொல்லுகின்றது.

### கர்த்தமனுக்குப் பிருகுமுனிவர் அறிவித்த அற்புதம்.

கர்த்தமன் என்னும் அரசன் பூவுலகமுழுவதும்

ஒரே குடைகீழில் இருக்கி அரசாண்டுவந்த காலத்தில் ஒருநாள் அந்த அரசனிடத்திற்குப் பிருகுமகா முனிவர் வந்தனர.

அந்த முனிவரை அரசன் சிறப்புள்ள ஆசனத்தி லிருத்தி அன்புடனே பூசித்த [illegible] றிய பின்னர் அவரைநோக்கி ஓ! தபசிரே [illegible] அடியேன் [illegible] தொருவருத்தமுமின்றி [illegible] முறையும் எனதொ ருகுடையில் ஆண்டு அநுபவி [illegible] ஆகையால் இத் தன்மைத்தாகிய செல்வம் [illegible] ளது எந்த [illegible] தவிலேயோ அதனைத் தெரிய [illegible] வேண்டுமென று விணணப்பஞ்செய்து [illegible]

அதைக் கேட்ட பிருகுமுனிவர் சேட்டு, அரசனே! நீ முற்செனனத்தி [illegible] செய்த [illegible] யே [illegible] ருக்கிறனே. ஆயினும் [illegible] அதிகச்செல்வத்தை யுடையவனே [illegible] தூ குலகருமங்களைக் கைவி ட்டனே. அதனை [illegible] நிறைந்த [illegible] உனனை வெறுத்து [illegible] தூ [illegible] ன்

அந்த வார்த்தையைக் கேட்டமாத்திரத்தில் உனக் கு இருசெவிகளுக்கு [illegible] கொடிய காட்டிலேனுந்

சென்று உயிரை நீக்கிக்கொள்வோமென்று மனம்வெறுத் [illegible] வீட்டைத்துறந்து காட்டிற்செல்கின்றபோது அங்கு [illegible] ரமத்தைக் கண்டேன்.

அந்த இடத்தில் வேதாகமபுராணங்களை வாசிக்கின்றவர்களும் அவைகளைக்கேட்கின்றவர்களும் பலதவமாதிகளைச்செய்து முடிக்கின்றவர்களுமான அளவற்ற முனிபுங்கவர்கள் புடைசூழச் சவுபரி மகாமுனிவரெழுந்தருளியிருப்பதைக்கண்டு அவரருகிற்சென்று சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து நின்றேன்.

பின்னர் அம்முனிவர் உன் முகத்தைநோக்கி நீ மிக்க மனவருத்தத்துடன் இங்கு வந்த காரியமென்னவென்று வினவினார்.

அதற்கு நீ வறுமையுற்ற காரணத்தால் உனக்கு நேர்ந்தயாவையும் அறிவித்தனை. அவையனைத்தையும் சவுபரிமுனிவர் கேட்டு மிகவும் இரக்கமுற்று உனக்குத் தீட்சைசெய்து விநாயகக்கடவுளுடைய மந்திரத்தையுபதேசித்து அதையநுட்டிக்கு முறைமையையுஞ் சொன்னார்.

அதை நீ அவ்வாறே அநுட்டித்து வருங்காலத்தில்

விநாயகசதுர்த்தி வந்தது. அத்தினத்தில் அச்சதுர்த்திவிரதத்தைக் கூடவிருந்து ஆகம விதிப்படி முடிப்பித்தார்.

பின்னர் அவ்விரதம் அநுட்டித்த மகிமையினாலே விநாயகக்கடவுளுக்குக் கிருபைசுரந்து உன்வீடுமுழுவதும் பொன் மணி முதலான சகலபொருள்களும் அளவற்ற செல்வங்களும் நிறைந்திருக்கும்படியாகச் செய்தார்.

விநாயகமூர்த்தி அப்படிச்செய்திருப்பதைச் சவுபரி முனிவர் தெரிந்துகொண்டு உனக்கறிவித்து உன்னையுன் வீட்டிற்குச் செல்லும்படியாகக் கட்டளையிட்டார்.

உடனே அவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குச்சென்று முன் வெறுப்புற்றிருந்த சுற்றத்தினரெல்லாம் எதிர்கொள்ளப் பெருமகிழ்ச்சியடைந்து வாழ்ந்திருந்தனை.

இப்போது அடைந்திருக்கிற சகலசெல்வமும் முந்திய சென்மத்தில் நீசெய்த சதுர்த்திவிரதத்தின் மகிமையாதலால் அதனை யெக்காலத்துங்கைவிடாது அநுட்டித்து வரக்கடவை யென்று அருளிச்செய்து பிருகுமுனிவர் என்பவர் தமது ஆச்சிரமத்திற்குச் சென்றனர்.

அதைக்கேட்ட கர்த்தம ராசன் மகிழ்ச்சியடைந்து நாளும் சதுர்த்தி விரதத்தை இடைவிடாது அநுட்டித்துக் கணேசமூர்த்தி கருணையால் முத்தியும் அடைந்தனன்.

இதையெல்லாம் பார்க்கவபுராணம் கர்த்தமன் உபாசித்த படலத்தைப்பார்த்தால் விவரமாயும் தெளிவாயு மறியலாம்.

கர்த்தமராஜன் யாதொரு பிரயத்தனமுஞ் செய்யா திருக்கப் பூவுலகெல்லாம் ஓர்குடை நீழலில் அரசாட்சி செய்யும்படி நேரிட்டது.

அவன் முந்திய ஜென்மத்திற் செய்த சதுர்த்தி விரதத்தினாலும் சவுபரி முனிவர் உபதேசித்த விநாயகக்கடவுளுடைய மந்திரத்தைப் பத்தியுடன் அநுட்டித்து வந்ததினாலுமென்று அறிகின்றோம.

அல்லாமலும் அவன் முந்தியசென்மத்தில் சவுபரி முனிவருடைய உபதேசத்தை உண்மையாகக்கைக்கொண்டதினால் அடுத்தஜென்மத்திலும் அந்த உபதேசம்பிருகு முனிவரால் கிடைத்து அதைக்கைக்கொண்டு கடைசியில் முத்தியும அடைந்தனனென்று தெரிகின்றோம்.

## அல்லாமலும்

உலகத்தில பெருஞ் செல்வத்தையாவது புத்திரர்கள் மனைவியையாவது நல்லபத்தினியையாவது மேன்மையான உத்தியோகத்தையாவது அழகுள்ளதாயும் நோயற்றதாயுமிருக்கிற தேகத்தையாவது கல்வியையாவது மெஞ்ஞானத்தையாவது அடைந்திருப்பது அவரவர்கள் முந்திய ஜென்மத்தில் செய்த தவமகிமை யென்றறிந்து இந்தச்ஜென்மத்தில விரதமுதலியதவஞ்செய்துவந்தால பிந்தியஜென்மத்தில மேன்மேலும் அதிகமாகப்பரமசிவம் கொடுத்தருளுமென்று உணர்ந்து விரதாதிகளை முயற்சித்து வரவேண்டும். அப்படி விரதாதிகளையநுட்டியாமலும் நம்மிலுந் தாழ்ந்தவர்களைப்பார்த்து நாம் கர்வங்கொண்டிருப்போமானாலும் மேன்மையுள்ளவர்களைப்பார்த்துப் பொறாமை யடைவோமானாலும் பிந்திய ஜென்மத்தில் யாவரும் நிந்திக்கும்படியான தாழ்மையடைவோமென்று உணரவேண்டும்.

## அன்றியும்

சைவசித்தாந்திகளாகிய நாமெல்லாம் சாதுக்களையடைந்து அவர்கள் உபதேசிக்கும் உபதேசத்தைச் சதா

6571



காலமுங் கியானித்தும் ஆலயத்திற்போய்ச சிவதரிசனை
செய்தும் சிவார்ச்சனைசெய்தும் சாதுக்களோடு உறவு
கொண்டாடியும் புராணமுதலிய நூல்களைபபடித்துங்
கேட்டும் பொய்முதலிய பாவங்களைச்செய்யாமல் எச்ச
ரிக்கையாயிருந்தும் வந்தால தவங்கைகூடும் அப்படித
தவங் கைகூடினவர்கள கடைசியிற் பரமசிவத்தின்
பிரத்தியட்சகாட்சியை யடையும்படியான மகாபாக்கி
யத்தையும் பெறுவார்கள்.

அப்படிபபரமசிவம் பிரத்தியட்சமாகினற மகாபா
க்கியததைப பெற்றவாகள் யாரெனில்

இதனடியிற் சொல்வதைப் பாருங்கள்.

## மனுசசக்கரவர்த்தி நீதி நடத்திய அற்புதம்

திருவாரூரில் மனுநீதி சோழனென்பவன் அரசாட்
சிசெய்துகொண்டிருந்தான் அவனுடைய ராச்சியத்தி
ல யாருக்காவது அநியாயம் நேரிட்டால் அந்தஅரசன் க
ட்டியிருககிற ஆராய்ச்சிமணியைவந்து அசைபபார்கள்

ஆராச்சிமணியின் ஓசை கேட்டவுடனே அரசன்
வெளியேவந்து அப்படி ஆராச்சிமணியயசைத்தவர்
களின் சங்கடத்தை விசாரித்து நீதிசெலுத்துவது அந்த

மனுநீதி சோழனென்னும் அரசனுடைய ஏற்பாடாயி ருந்தது.

அப்படியிருக்குங் காலத்தில் ஒருநாள் அரசனுடைய குமாரன் தேரிலெழுந்தருளி வழக்கப்படி பவனிவந்தான் வரும்பொழுது ஒருபசுவின்கன்று அரசனுடைய குமாரன் ஏறிச்செல்லும் தேரினுடைய வண்டிற்காலுக்குள் அகப்பட்டு இறந்துபோயிற்று.

அப்படி யிறந்துபோன கன்றினுடைய தாயாகிய பசு அறிந்து அலறிக்கொண்டு அரசன் கட்டியிருந்த ஆராய்ச்சிமணியைக் கொம்பினல் அசைத்ததினலே மணிஓசை கேட்டு அரசன் வெளியேவந்து பசுவைப்பார்த்ததின் பேரில் பக்கத்தில் நின்றஜனங்களிடத்தில் விசாரணை செய்ததினல் நடந்த காரியங்களை யெல்லாம் அரசன் அறிந்துகொண்டான்.

உடனே அரசன் மந்திரியையும் சாஸ்திரவல்லவர்களையும் வருவித்து இப்படிப்பசுவின்கன்று கொலையுண்டு போயிருப்பதற்கு நியாயத்தீர்ப்பு எப்படிச்செய்வது சரியாயிருக்கும் சொல்லவேண்டுமென்று கேட்டான.

அதற்குச்சாஸ்திரிகள் பசுவைக்கொன்ற தோஷம்

நீங்குவதற்குப் பொருட்செலவினால் பிராயச்சித்தம் செய்யும்படி சாஸ்திரத்தில் ஏற்பட்டிருப்பதைச் சொன்னார்கள். அப்படிச்சாஸ்திரிகள் சொல்லிய நியாயத்தைக் கேட்ட அரசன் அவர்களுக்கு மாறுத்தரமாகச் சொல்லியது

எப்படியெனில்

முதலாவது, இறந்துபோன கன்றினுடைய தாயாகிய இந்தப்பசுவானது உலகத்திலுள்ள மற்றப்பசுக்களைப்போலன்றி மனிதரைப்போலவே ஆராய்ச்சிமணியையடித்ததினால் இந்தப்பசுவை மனிதர்களுக் கொப்பாகவேவைத்து நியாயத்தை ஆலோசிக்கவேண்டுவதே முறைமையாயிருக்கின்றது.

இரண்டாவது, எனது குமாரன் இந்தக்கொலைபாதகத்துக்கு உரித்தாயிருப்பதை நினையாமல் அவன்பேரில் இரக்கஞ்செய்து மரண தண்டனையை விலக்குவேனாகில் அவனுக்குப்பின்பு யமதண்டனை கிடைத்தேதீரும் அப்படி அவனுக்கு யமதண்டனை கிடைப்பது என்னிமித்தங் கிடைத்ததாகவே யிருக்கும் ஆதலால் இப்போது அவனைத்தண்டியாமல் விடுவேனாகில் அவனுக்

குக்கெடுதலசெய்ததாக இருக்குமேதவிர இரக்கஞ்செய்ததாக இருக்கவேமாட்டாது.

உலகத்திலுள்ள மனிதர்கள் குற்றஞ் செய்வதில் அரசனுக்கு வெளிப்பட்ட குற்றத்திறகுமாத்திரம் அரசனால் தண்டனையடைவார்கள் அப்படி அரசனது சபைமுன்பாக வெளிப்பட்ட குற்றத்திற்கே அரசன் தண்டனை செய்யவும் மட்டான் தண்டனை செய்வது அரசனுக்கு நீதியமன்று.

அப்படி ஒருவன் செய்தகுற்றம் அரசனுக்குவெளிப்படாததி னிமித்தம குற்றவாளி அரசன் தண்டனைக்குத் தப்பித்துக்கொண்ட போதிலும் அந்தக்குற்றவாளிக்குத் தேகம் நீங்கியபின் யமதண்டனை கிடைத்தேதீரும யமதண்டனையோ அரசன் தண்டனையைப்பார்க்கிலும் எத்தனைமடங்கோ அதிகமாயிருக்கும் ஏனெனில் தானசெய்த குற்றத்தை அரசன விசாரிக்குஞ் சமயத்தில் ஒப்புக்கொள்ளாமல் பலதந்திரங்களினாலே மறைப்பித்த தப்பிதமுங் கூடவேதினாலேயே இப்படிக்கெல்லா மிருப்பதால் இப்பொழுதே எனது குமாரனைத் தண்டனைக்குட்படுத்துவது நான் எனதுகுமார

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIVUR, MADRAS-41

ன் மேல்வைத்த இரக்கமென்றுகுமேதவிர வேறில்லை.

மூன்றுவது, யான் இப்பொழுது மன்னிப்பேனுகில் உலகத்திலுள்ளவர்க ளெல்லாம் யாஙன் செய்ததை நினைத்து அவரவர்கள் தங்கள்புத்திரர்கள் என்னதப்பிதஞ் செய்தபோதிலும் தண்டியாமல் வளர்ப்பார்கள் அப்படி குற்றஞ்செய்த பிள்ளைகள் பிதாவினுல் தண்டனையடையாததால் மூர்க்கராகவே வளர்ந்து பின்பு அரசன தண்டனைக் குள்ளாவார்கள் அப்படி அரசனுல் தண்டனை யடைவதற்கு அவர்கள் செய்தகுற்றம் அரசனுக்கு வெளிப்படாதபடி பலபொய்களினுல் மறைப்பித்துக்கொண்ட போதிலும் யமதண்டனைக்குத் தப்பவேமாட்டார்கள் இப்படிக் குற்றவாளிகள் அடைகிற தண்டனையைப்பார்க்கிலும் அவர்களுக்காகப் பொய்ச்சாட்சி சொலபவர்கள் அதிக தண்டனை யடைவார்கள்.

ஏனெனில்,

ஒருமனிதன் செய்தகுற்றத்தைக் குறித்து அரசன் விசாரணை செய்யுங்காலத்தில் சாட்சிக்காரன் பொய்யினுல் அரசனுக்கு [illegible]

னாகில் அரசன் தண்டியாமல் விடுதல் செய்வான் அதுக
ண்டு உலகத்திலுள்ள அநேகர்தாங்கள் குற்றஞ்செய்
தால் பொய்ச்சாட்சிகளினாலே தப்பித்துக் கொள்ளலா
மென்றகருத்தினால் அநேகர் குற்றஞ்செய்யத்துணிந்து
அரசனுடைய தண்டனையை யடைவார்கள் அதற்குத்த
ப்பித்துக்கொண்ட போதிலும் யமதண்டனை யடையா
கள் இப்படி அநேகர் தண்டனை யடைவதற்குப் பொய்
ச்சாட்சி சொல்பவர்களே காரணர்களா யிருப்பதால்
குற்றவாளிகள் அடைகிற தண்டனையைப் பார்க்கிலும்
பொய்ச்சாட்சி சொல்பவர்களுக்கு யமதண்டனை மிகுதி
யாய்க் கிடைக்குமென்பதே.

இப்படி உலகத்திலுள்ள ஜனங்கள் குற்றஞ் செய்
தற்கும் தண்டனை யடைதற்கும் மூலகாரணன் யானெ
ன்பதை யாரால் மறைக்கக்கூடும் என இப்படியேஅநே
க நீதிசாஸ்திரங்களை எடுத்துப்பேசி இந்தப்பசுவின் க
ன்று தேர்வண்டிற்காலுக்குள் அகப்பட்டு எவ்விதமாயிற
ந்துபோயிற்றோ அவ்விதமாகத்தனதுமகனை வீதியிற்கி
டக்கச்செய்து அவன்மேலே அந்தத்தேரை நடத்தி மர
ண தண்டனை செய்வதே நீதியாயிருக்கின்றதென்று நி
ர்மாணித்து அப்படியே செய்விக்கும்படி மந்திரிக்குக்

கட்டளையிடவே மந்திரி தனுயிரை மாய்த்துக்கொண் டான் அதுகண்டு அரசனே தேரிலேறித் தனமகனைத் தெருவிற்கிடத்தி அவன் மார்பில் தேரையோட்ட அரச குமாரன் இறந்துபோனான்.

அந்தச்சமயத்திற் கூடியிருந்தவர்களனைவரும் எத்த னையுகமாகவோ இந்த மனுநீதி சோழனும் அவனுடை யமுன்னோர்களும் இந்த ராச்சியத்திலுள்ள சனங்களெ ல்லாம் யாதொரு இடையூறுமின்றி இன்பத்தையனுபவி க்கும்படி ஆண்டுவந்தார்கள் இனிமேல் இந்தராச்சியத் தை நீதியாயாளுவதற்குத் தகுதியுள்ள ராசகுமாரனே இறந்துபோனான். அரசனுக்கு வேறுகுமாரர்களோ இல் லை. ஆதலால் நாமெல்லாம் எந்தக்கொடுங்கோல் மன்ன னுடைய ஆளுகைக்குள்ளிருந்து துன்பத்தை யடைய வேண்டியிருக்குமோ வென்று பரிதாபத்தோடு கூப்பாடு போட்டு அலறி அழுதார்கள்.

மந்திரி தன்னை மாய்த்துக்கொண்டதினால் தற்கொ லை செய்தபாவம் அவனைச்சேரமாட்டாது. ஏனெனில் அனேக ஜனங்கள் படுகிற வியாகுலத்தைச் சகிக்கமாட் டாமல் தன்னுயிரை மாய்த்துக்கொண்டான். ஆதலால்

சிவபதம் அடைவனென்று கூடிவந்திருந்த சாஸ்திரிக ளெல்லாம் மந்திரியைப் புகழ்ந்தார்கள். அரசகுமாரனும மந்திரியும் இறந்துபோகவும் தேசத்திலுள்ள ஜனங்களெ ல்லாம் துக்கசாகரத்தில மூழ்கவுமாக இருக்கும் தற்சம யத்தில் பரமசிவம் எழுந்தருளி ஆதாரத்தில்நின்று காட் சிகொடுத்ததை அரசனும் உலகத்தவாகளும் தரிசித்துப பரவசம்அடைந்து நின்றார்கள்.

இறந்துபோன பசுவின்கன்றும் மந்திரியும் அரசகு மாரனும் உயிர்த் தெழுந்தார்கள்.

இது பெரியபுராணத்துள் மனுநீதி

கண்டபுராணததைப பார்த்தால் விவரமாயும தெளிவாயும் அறியலாம்.

அரசனது தவமுதிர்ச்சியினால் உலகத்திலுள்ள பா மரர்களும் பரமசிவத்தைப பிரத்தியட்சமாகக் கணடுத ரிசிக்கும்படியான மகாபாக்கியத்தை யடைந்தாாகள். நீதியும் தெய்வபக்தியும்உள்ள அரசன் வாய்ப்பதைபபார க்கிலும் உலகத்திற்குப் பாக்கியம் வேறில்லை. எல்லாம் யோசிக்குமிடத்தில் தவத்தைவிரும்பாத ஜென்மம் மா

ளிடஜென்மம் அன்று.

## மீனாம்பிகை பட்டினத்தாருக்கு அமுதூட்டிய அற்புதம்.

பட்டினத்தார் மதுரையில் ஒருநாள் தம்மையறிந்து பிச்சையிடுவோரில்லாமையால் இவர்பட்டினியாய்க் கோவில் வெளிமண்டபத்தில் வந்து நின்றுகொண்டு

“இருக்குமிடந்தேடி யென்பசிக்கே யன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தா லுண்பேன்-பெருக்க
வழைத்தாலும் போகேனரனே யென்றேக
மிளைத்தாலும் போகேனினி”

என்ற திருவெண்பாவைப் பாடிப்போட்டு அந்த மண்டபத்தின் தூணிற் சாய்ந்து ஆனந்தநித்திரை செய்துகொண்டிருந்தனர்.

அச்சமயத்தில் பரமசிவமாகிய சொக்கலிங்கம் நம்முடைய பத்தனாகிய பட்டினத்தான் பட்டினியே கிடக்கிறான் ஆதலால் அவனுக்கு அன்னங் கொண்டுபோய்க் கொடுவென்று உலகமாதாவாகிய மீனாம்பிகைக்குக் கட்

டனைவிட்டனர்.

அந்தக்கட்டளையைச் சிரமேற்கொண்டுகோவிலிலு ள்ள வெள்ளிக்கும்பாவில் அன்னமும் பாலும் எடுத்துக் கொண்டு ஆனந்தநித்திரை செய்கிற பட்டினத்தாரிடத் தில்வந்து, அடே சாத மிருக்கிறது வாங்கிச்சாப்பிடென் றனள்.

பட்டினத்தார் யாரோ என்றறியாமல் தூரப்போ தொந்தரவு செய்யாதே என்றனர்.

அம்மை அடே சாப்பிட்டுப்போட்டு நித்திரைசெய் பட்டினி கிடக்கவேண்டாமென்று மறுத்துஞ்சொல்லி னள்.

அதன்பேரில் பட்டினத்தார் வாயைத்திறந்துகொ ண்டு வேண்டுமானால் வாயிலே போடு என்றனர்.

அம்மை தமது தோளிலிட்டிருந்த துகிலை யிடுப்பி ற் சுற்றிக்கட்டிக்கொண்டு அன்னத்தை யுருட்டி யுருட் டிப் பட்டினத்தார்வாயிற் கொடுக்கக் கண்ணையும் விழி த்துப்பாராமற் சாப்பிட்டனர்.

பின்பு கடையிற் கும்பாவிலிருந்த பாலையுங் கொ
டுக்க அதையுஞ் சாப்பிட்டனர். அம்மையும்வெள்ளிக் கு
ம்பாவை அந்தஇடத்திற்றானே வைத்துவிட்டுப் போ
ய்விட்டாள். பட்டினத்தாருஞ் சற்றுநேரஞ் சென்ற
பின் வேறுஇடத்திற்குப் போய்விட்டார். வெள்ளிக்
கும்பா அந்த இடத்திற்றானே கிடந்தது.

மறுநாள் காலமே கோவில்அதிகாரி வெள்ளிக்கும்பா
வெளியே கிடப்பதைத்தெரிந்து முறைகாரரா யுள்ள
நம்பிமாரை வருவித்து இதுகோவிலுக்குள் ளிருக்
கப்பட்ட வெள்ளிக்கும்பா வெளியேவருவதற்குக் கா
ரணமென்னவென்று விசாரித்ததில் தங்களுக்கு ஒன்று
ந் தெரியாதென்று சொன்னார்கள்.

அதற்குக் கோவில் அதிகாரி நீங்கள் இப்படிச்சொ
ல்வது கள்ளத்தனமென்றுநிதானித்து நம்பிமாரைக்கட்
டியடிப்பித்தான்.

அப்படி நம்பிமாரை யடிப்பிக்கும்பொழுது வேறொ
ரு நம்பியார்பேரில் ஆராதனை யுண்டாகி நீ யிவர்களை
ஒன்றுஞ் செய்யவேண்டாம். நாம் அம்பிகை. சுந்தரேச

ர் உத்தரவுப்படி நாமே நம்முடைய பட்டினத்தாருக்கு இந்த வெள்ளிக்கும்பாவில அன்னங் கொண்டுவந்து கொடுத்தோம். அதை யுலகத்தார் அறியும்பொருட்டு இந்த இடத்தில் இந்த வெள்ளிக்கும்பாவைப் போட்டு விட்டுப் போனகாரியம். இப்போது இந்த மதுரைமாநகரத்துள்ளே இன்ன இடத்தில் பட்டினத்தார் நிஷ்டை செய்து கொண்டிருக்கிறான். எல்லோருந் தெரிந்துகொள்ளலாமென்று உத்தரவாகிமுடிந்தவுடனே ஆராதனை நீங்கிற்று. உத்தரவானபடி அந்த இடத்தைப் பட்டினத்திலுள்ள ஜனங்களெல்லாம் திரள் திரளாய்ப் போய்ப் பார்த்ததில் பட்டினத்துஸ்வாமிகள் நிஷ்டை செய்துகொண்டிருப்பதைக் கண்டு தெரிசித்துப் பரமானந்தத்தை யடைந்தார்கள்.

## மருதப்பேசர் பட்டினத்தாருக்குத் தண்ணீரளித்த அற்புதம்.

திருவிடைமருதூர் ஆலயத்தின் கோபுரவாயிலிலிருந்து தவஞ் செய்துகொண்டிருக்கும் காலத்தில் ஒரு நாள் பாதி ராத்திரியில் வெளியே வந்து மலங்கழித்துப் போட்டு ஜலமில்லாமல் வருத்தமடைந்து

"மென்று விழுங்கி விடாய்கழிக்க நீர்தேட
லென்று விடியு மெனக்கென் கோவே—நன்றி
கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற
மருதாவுன சந்நிதிக்கே வந்தும்"

என்று திருவெண்பா மூலமாய் மருதப்பேசனை நோக்கி முறையிட்டனர்.

உடனே மருதப்பேசர் ஒரு சுரைக்குடுக்கையில் ஜலங்கொண்டுவந்து வைத்துக்கொண்டு பட்டினத்தாரை நோக்கி, அடே! அதாரடா! அங்கே என்னவேண்டும் தண்ணீர்வேண்டுமோ என்று கேட்டனர்.

பட்டினத்தார் ஆமென்றுசொல்லவே சுவாமி தமது கையிலிருந்த சுரைக்குடுக்கையைக் கொடுத்தனர்.

அதைப் பட்டினத்தார் வாங்கிக்கால்கழுவிக் கொண்டிருந்தவர் மறுபடி தனக்குத் தண்ணீர் கொடுத்தவரை யேறிட்டுப் பார்க்கும்பொழுது தனக்குக் காணாமல் மறைந்தனர்.

அதுகண்டு பட்டினத்தார் இப்போது நமக்குத்

தண்ணீர் கொண்டுவேந்து தந்தது பரம்பொருளாகியமருத ப்பேசர்தானென்றறிந்து அழுது விழுந்து எழுந்து கூத்தாடிப் பரவச மடைந்து ஆனந்தபாஷ்பம் வடித்துக் கொண்டிருந்தனர்.

விக்கிரமாதித்தனும் பத்திரகிரியாரும் ஒருபிதாவின் பிள்ளைகள். அந்தப்பத்திரகிரியாருடைய காலமும் இந்தப்பட்டினத்தாருடைய காலமும் ஒன்று. பட்டினத்தாருடைய சரித்திரத்தைப்பற்றி அனேக ஆயிரங்கிரந்தங்கள் இருக்கின்றன. அவருடைய சமாதி திருவொற்றியூரிலிருக்கின்றது.

இந்தத்திருவொற்றியூரிலேதான் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலிநாச்சியாரை மணந்தது. இந்நகரம் சென்னைமாநகரத்தின் வடகீழ் திசை ஆறுமைல் தூரத்திலுள்ள சமுத்திரக்கரையோரத்திலிருக்கின்றது. அந்த ஆலயத்தில் பிரமா விஷ்ணு இந்திரன் அகத்தியர் முதலிய மஹாரிஷிகள் அனேகர் தனித்தனியே வெவ்வேறு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து அவரவர்கள் பெயரும் வழங்கப்படுகின்றன. தேவாரம் அருளிய மூவரும் அந்தத்தலத்துக்கு அனேகதேவாரப்பதிகங்கள் அருளிச்செய்

திருக்கின்றார்கள்.

## மருதப்பேசர் பட்டினத்தாரிடத்திலும் பத்திரகிரியாரிடத்திலும் பிச்சைக்குவந்த அற்புதம்.

திருவிடைமருதூர் ஆலயத்தின் கீழக்கோபுரவாயிலிற் பத்திரகிரியாரும் மேலக்கோபுரவாயிலிற் பட்டினத்தாருமாகத் தபசு செய்துகொண்டிருக்குங் காலத்தில் ஒருநாள் இரவில் சுவாமி மருதப்பேசர் பிச்சைக்காரன் போலப் பட்டினத்தாரிடத்தில் வந்து அப்பா பசிதீவிரமாயிருக்கின்றது. அன்னங் கொடுக்க வேண்டுமென்று கேட்டனர்.

அதற்குப் பட்டினத்தார் நானும் பிச்சைக்காரன் தான் ஒன்றும் என்னிடத்திற்கிடையாது அதோ கீழக் கோபுரவாயிலில் ஒருசமுசாரகாரன் இருக்கிறான் அவனிடத்திற்போவென்றார்.

உடனே கீழக்கோபுரவாயிலி லிருக்கிற பத்திரகிரியாரிடஞ் சென்று அப்பா பசிமிகுதியாயிருக்கின்றது

அன்னங்கொடுத்து என்பசியை யாறவேண்டும் என்றனர்.

அதற்குப் பத்திரகிரியார் நானும் பிச்சைக்காரன் தானே என்னிடத்தில ஒன்றுங் கிடையாது என்றனர்

அதற்குச் சோதனைக்கு வந்த பிச்சைக்காரனாகிய சுவாமி மேலக்கோபுரவாயிலில் ஒருவனிருக்கிறான. அவனிடத்திற் பிச்சைகேட்டேன். அதற்கு அவன், தான் பிச்சைக்காரனென்றும இந்தக்கீழக்கோபுர வாயிலில் ஒருவன் சமுசாரத்தோடிருக்கிறானென்றும அவனிடத்திற் போனாற்கிடைக்குமென்றும் சொன்னான். அவன் வார்த்தையைக்கேட்டு உன்னிடத்தில் வந்தேன நீயும் இப்படிச் சொல்லுகிறாய் இதென்னமாறுபாடு இப்படிப்பட்ட மாறுபாட்டை நான் எங்குங்கண்டதில்லை யென்றனர்

உடனே பத்திரகிரியார் சொன்னார் எப்படியெனில்.—என்னிடத்தில இந்தஓடும் இந்தத்தடிக்கம்பும் இந்த நாய்க்குட்டியுந் தானிருக்கின்றன.

இவைகளைத்தான் அவன் சமுசாரமென்று சொல்

வியிருக்கிறான் என்று சொல்லிக்கொண்டு தடிக்கம்பினா ல நாய்க்குட்டியின் மண்டையில் ஒருஅடி ஓங்கியடித் தனர். நாய்க்குட்டி யிறந்துபோயிற்று. ஓட்டிலும் ஒரு அடி அடித்தார். அதுவும் உடைந்துபோயிற்று தடிக்கம் பையும் இரண்டுதுண்டாக முறித்துத் தூரஎறிந்துவிட் டனர்

அதன்பின்பு பிச்சைக்காரன்போல் வந்த சுவாமி யை நோக்கி, இவ்வளவுதானப்பா என்னுடைய சமுசார ம் சொல்லக்கேட்டனை, இவைகளைத்தான் அவர் சமுசாரமென் று சொன்னதும, நீ எப்போதும் [illegible] மாறுபாடு என் று சொன்னதுமே என்றனர்.

உடனே சுவாமியும் மறைந்தார். பத்திரகிரியார் பரமானந்த நிஷ்டையிலிருந்தனர்.

நாயடியாள் அருளிற்கலந்த அற்புதம்.

பத்திரகிரியாரால் இறந்துபோன நாய்க்குட்டி கா சி தேசத்து அரசனுக்குப் பூர்வஞானத்தோடு குமாரத்தி யாய்ப் பிறந்தது. பின்பு அந்த ராஜகுமாரத்தி சதாகால மும் பத்திரகிரியார்பேரிலேதானே சிந்தை வைத்து

வளர்ந்து கலியாணப்பருவஞ் சமீபித்திருக்குங் காலத்தில் தன் மாதாபிதாவினிடத்தில் என்னுடைய நாயன் திருவிடைமருதூரிலிருக்கிருர். நான் அவரைத் தரிசனை செய்ய வேணுமென்று அறிவித்தனள்.

அதற்கு ராஜனும் ராஜதேவியும் தங்கள் குமாரத்தியை நோக்கி உனக்குக் கலியாண பருவஞ் சமீபித்திருப்பதாலும ராஜகன்னிகையாதலாலும் மாளிகையை விட்டு வெளியே புறப்படுவது முறையல்லவென்று தடுத்தார்கள்.

அதற்கு ராஜகுமாரத்தி நீங்கள் இந்த ஒருகாரியத்துக்குந் தடை செய்வீர்களாகில் என்னுயிரை விட்டுக் கொள்வேனென்ருள்.

இப்படிச் சொல்வதைக் கேட்ட அரசனும தேவியும தங்கள் குமாரத்தியைச் சேனைகள் படைத்தலைவர மந்திரியவர்களுடன் அனுப்பினதின்பேரில் எல்லாரும திருவிடைமருதூர் வந்து சேர்ந்து நிஷ்டை செய்து கொண்டிருந்த பத்திரகிரியார் சந்நிதானத்தில் ராஜகுமாரத்தி சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தாள்.

பத்திரகிரியார் நிஷ்டை நீங்கி ராஜகுமாரத்தியை ப்பார்த்து நீ யார் என்றனர்.

அதற்கு ராஜகுமாரத்தி நாயடியாள் என்றனள்.

உடனே பத்திரகிரியார் ஞானதிருஷ்டியால் அறிந்து எழுந்து ராஜகுமாரத்தி கையைப்பிடித்துக்கொண்டு ஆலயத்துக்குட்சென்று சந்நிதானத்தில் நின்றுகொண்டு திருமூலலிங்கத்தை நோக்கிப் பிச்சைச் சோற்றுக்கும் பிறப்புண்டோ மருதப்பா என்றனர்.

உடனே யாவருக்கும் புலப்படும்படி தோற்றிய அருட் பிரகாசத்திலே நாயடியாளாகிய ராஜகுமாரத்தி மறைந்தனள்.

பத்திரகிரியார் முன்போல நிஷ்டை செய்து கொண்டிருந்தனர். ராஜகுமாரத்தியுடன்வந்த யாவரும் காசிமாநகரத்துக்குப் போயினர்.

அன்றுமுதல் இன்றுவரையும் சோழதேசத்தில் காவிரிநதிக்குத் தென்பக்கமிருக்கிற திருவிடைமருதூரிற் பத்துவயசுச் சிறுவர்கள்வரை யிந்த மஹாஅற்புதத்தை

ப்பற்றிப் பிரஸ்தாபித்துச் சிவானந்தவாரியில் மூழ்கின
ரூர்கள்.

## மெய்கண்டதேவர் திரு அவதார அற்புதம்.

சோழதேசம் நடுநாட்டிலே திருப்பெண்ணாகடம்
என்னும் தலத்திற் பரம்பரைச் சைவவேளாளர் குலத்
தில் அவதரித்த அச்சுதகளப்பாளர் என்னும் ஒருசிவன
டியார் இருந்தனர்.

அவர்செய்த பெருந்தவத்தினால் அவர் மனைவியார்
கருப்பந் தரித்துப்பெற்ற பிள்ளைக்கு சுவேதவனப்
பெருமாள் என்று திருநாமந் தரித்தார

அந்தப்பிள்ளையார் திருவெண்ணெய் நல்லூர் என்
னும் திருப்பதியிலே தமதுடைய மாமனார் வீட்டில் வள
ருவாராயினர்.

வளர்ந்து இரண்டு வயதிற்றானே மெய்யுணர்வின்
முற்றுப் பேறுடையராய் எழுந்தருளியிருந்தார.

அப்படியிருக்கும் நாளில் கைலாயத்திலிருந்து
பரஞ்சோதிமுனிவர் என்பவர் வந்து கீர்வாணபாஷை
யிலிருந்த சிவஞானபோதம் என்னும் நூலைக்கொடுத்துத

... NIYAY...
U. V. SWAMINATHA ... LIBRARY
TIRUVANMIYUR. MADRAS-4

தமிழில் மொழிபெயர்த்துப் பொழிப்புரையுஞ் செய்யும்படி யுத்தரவு செய்து மெய்கண்டா னெனத்திருப்பெயருங்கொடுத்து அவரைவிட்டு நீங்கினர்.

அந்த உத்தரவுப்படி மெய்கண்டதேவர் சிவஞானபோதம் என்னும் நூல் பன்னிரண்டு சூத்திரத்தையும் கீர்வாண பாஷையிலிருந்து தமிழில் மொழிபெயர்த்து அதற்குப் பொழிப்புரையும் எழுதினர்.

இப்படி மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதம பன்னிரண்டு சூத்திரத்தையும் அதன்பொழிப்புரையையும் திருவாவடுதுறை யாதீனத்தில் ஞானசூரியனெனத் தோன்றிய சிவஞானமாதவர் என்பவர் கலையிலா ஞானப்பேற்றால் ஆராய்ந்து அந்நூலுக்குச் சிற்றுரையும மகாபாடிய மென்கின்ற பேருரையுஞ் செய்தனர்.

அவைகளில் சிவஞானபோதம் சிற்றுரை அச்சிடப்பட்டு வழங்குகின்றது.

அதன்பொருள் கல்விப்பயிற்சியும் பேரறிவு முடையவர்களுக்குத்தான் விளங்கும்.

மகாபாடியமென்னும் பேருரையோ அச்சயற்ற வில்லை. ஓலையேட்டில திருவாவடுதுறை ஆதீனம ஒன்றி லேகாணிருக்கிறது.

அதை மெய்கண்டான் சந்ததியிற்றோன்றிய நம சிவாயதேவர் தானத்தில் மெய்ஞ்ஞான வடிவமாகத் தோன்றும் மூர்த்திகளும அந்தமூர்த்திகளால் அந்த ஆதீனத்துமுனிவருட் சிறந்தவர்களாகளும் அறிவாாகளே தவிர மற்றையாறியார்கள்.

புகழேந்திகம்பன் ஒட்டக்கூத்தன் காளமேகம் இவர்களெல்லாம் பண்டைககாலததிற சிறந்தகலவிமான்களா யிருந்தார்கள்.

இந்தக்காலத்தில் ஆறுமுகநாவலரவர்கள் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் இவர்களிருவரும் சிறந்தகல்விமான்களெனவும் ஒழுக்கத்திற் சிறந்தோரெனவும் உண்மைநிலைகண்ட தீரரெனவும் இருந்தவர்களுக்குத் திருவாவடுதுறை ஆதீனம் மஹாசந்நிதானம் சுப்பிரமணிய தேசிகர் பெருங்கருணையால் இந்தச்சிவஞான போதம பேருரை முழுவதையும் திருவாக்காலருளிப் போதித்

தனர்

இப்படிப்பட்ட அருமையான நூலையும், இந்நூலை யிரண்டுவயதில் அருளிச்செய்த மெய்கண்ட தேவரையும், இந்நூலுக்குச் சிற்றுரையும் பேருரையும் அருளிய சிவஞானமாதவரையும் நன்குமதிக்குஞ் சைவரேயுய்யுவர் மற்றையா ரைவர்.

இந்த மெய்கண்டதேவருக்கு இரண்டு வயதில் இவ்வளவு மெய்யுணர்வு கிடைத்தது எதினால்? முந்திய தவத்தினால்.

மகாபாடிய மென்னும் பேருரை யெழுதியவருக்கும் எதினால் கிடைத்தது? முந்தியதவத்தினால் கிடைத்தது.

இந்தக்காலத்திலும் அறிவிற் சிறந்தோரும் இருக்கிறார்கள். அவர்கள் இந்தச்சென்மம ஒன்றில் இவ்வளவு அறிவையும் அடைந்தார்களென்றெண்ணவேண்டாம். ஜெனனந்தோறும செய்துவந்த தவத்தினால் அடைந்தார்களென்றே எண்ணவேண்டும். ஆதலால் நாமெல்லா

ரும் முந்திய ஜென்மங்களில் தவத்தை விரும்பாத பேதைமைகளாயிருந்த போதிலும் இந்த ஜென்மமுதற் கொண்டாவது நன்முயற்சியிற் பிரவேசிப்பதற்குச் சாஸ்திரங்கள் சொல்வதையும் சாதுக்களாயுள்ளவர்கள் போதிப்பதையும் சிந்தித்து நடக்கக்கடவோம்.

### ஊமையாயிருந்த குமரகுருபரருக்குக் கனவில் உபதேசமான அற்புதம்.

திருநெல்வேலியிலிருந்து கிழக்கே இருபது மைல தூரத்திலிருக்கிற ஸ்ரீவைகுண்டத்தில் முன்போது நல்லகுலத்துக் கவிராய மரபிற் பிறந்தவர்களுள். அந்தக்குடும்பத்தில் முந்நூறு வருடத்துக்கு முன் சண்முகசிகாமணிக் கவிராயர் என்பவர் புத்திரப்பேறின்றியிருந்தனர். அப்படிப் புத்திரப்பேறில்லாமையால் அவரும் அவருடைய மனைவியார் சிவகாமியம்மையார் என்பவரும் சிலகாலம் திருச்செந்தூருக்குப் போய் மாதாந்த தரிசனம் செய்துகொண்டு வந்ததின்பேரில் ஒருபுத்திரர் ஊமையாகப் பிறந்தனர். அது கண்டு தந்தையருந் தாயரும் குழந்தை ஐந்தாம்வயதுப் பருவமாகியும் வாய் பேசாமல் ஊமையாயிருப்பதால் தமக்கு மனவருத்தமா

யிருக்கின்றது. இந்தவருத்தத்தைத்தீர்ப்பவர் செந்திலாதி
பனைத்தவிர வேறொருவராலாகா தென்று உறுதிசெய்
துகொண்டு திருச்செந்தூருக்குப் போய் ஆலயத்தில் வ
சனமிருந்துவரும் நாளில் ஏழாநாள் இவர்கள் நித்திரை
செய்யுங் காலத்தில் குழந்தைக்கு சுவாமிவந்து கனவில்
உபதேசஞ் செய்தனர். அப்பொழுது குழந்தை எனக்கு
கனவிலுபதேச மாகுமிடம் எங்கேஎன்று, கேட்டதற்கு
எந்த ஆதீனத்திலாவது எந்தச் சங்கத்திலாவது நீ பிரசங்
கம்பண்ணும்போது உன்னைஎவர்கள் கேட்டகேள்விக்கு
ப்பதில் சொல்வதற்கு உனக்கு நாவுதடுமாறுமோ அவர்க
ளே உனக்குககாரிய ஆசாரியரென்று உத்தரவு கொ
டுத்ததுமன்றிக் குமரகுருபரா என்று தட்டியெழுப்பின
து மல்லாமல் குழந்தையின் பிதாவின்கனவில் இன்று
விடிய நீயும் உன் பெண்டாட்டி பிள்ளைகளுமாக வந்து
விசுவரூபதரிசனம்தரிசித்தால உடனேகுழந்தைவாய்திற
ந்து பேசுவானென்று உத்தரவுகொடுத்து விட்டுப்போய்
விட்டார். இவர்கள் எழுந்து நீராடி நியமநிட்டைமுடித்
துக் கொண்டு ஆலயத்துட்சென்று விசுவதரிசனஞ் செ
ய்தார்கள். செய்தவுடன் ஊமைப்பிள்ளை பிதாவை நோ
க்கி ஐயா வெள்ளோலையும் எழுத்தாணியும் வேண்டுமெ,

ன்று கேட்டது. அப்பொழுது பிதாவானவர் குழந்தையைப்பார்த்து அப்பா உன்னைப் படிக்கவைக்க வில்லையே நான் எழுதுகிறேன் நீ சொல என்றார் உடனே குமரகுருபரர் வாய்திறந்து.

பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேரரிய *
பாமேவு தெய்வப் பழமறையுந்—தேமேவு *
நாதமுநா தாந்தமுடிவு மறைவைதீர்ந்த *
போதமுங் காணாத போதமாய் *

என்று அடியெடுத்துக் கலிவெண்பாப் பாடி முடித்தது

அதைப் பிதாவானவர் எழுதிக்கொண்டார். பின்பு குமரகுருபரரும் அவருடைய மாதா பிதா முதலிய அனைவரும் ஸ்ரீவைகுண்டம் வந்து சேர்ந்தார்கள். இது நடந்தது கொல்லம் ஆண்டு எழுநூற்றுப் பதின்மூன்றில். அந்தக்கலிவெண்பா இந்தக்காலத்தில் அச்சிறப்பதிப்பிக்கப்பட்டுத் தமிழ்நாடு எங்கணும் பரவியிருக்கிறது. ஐந்து வயதில் அவர் வாக்கிலிருந்து வந்த கலிவெண்பாவின் கருத்தை விவேகிகள் சிந்திப்பார்களாகில அவனையும்என்

பிணையும் உருக்கும்.

## மீனாம்பிகை குமரகுருபரருக்கு முத்துமாலை அணிந்த அற்புதம்,

ஊமையாயிருந்த குமரகுருபரர் கனவில் சண்முக தேசிகர் உபதேசித்ததுமுதற் சகல சாஸ்திரபண்டிதத் திறமையுமுடையராய்த் தம்மிடத்தில்வந்த எப்படிப்பட்ட சாஸ்திர வல்லவர்களிடத்திலும் சாஸ்திரவிசாரணைசெய்தும் தருக்கம்செய்தும் வெற்றியடைந்து கொண்டிருந்தவர் கொல்லம் எழுநூற்றுப்பதினேழாம் ஆண்டில மதுரை புரத்தையடைந்து சுந்தரேசனையும் மீனாம்பிகையையும் தரிசித்து அக்காலத்து அரசனாகிய திருமலைநாயகரது சமஸ்தானத்தில் வேதவாக்கியங்களை யெடுத்துப் பிரசங்கஞ்செய்து பின்பு சர்வாண்டத்துக்கும் மாதாவாகிய மீனாட்சியம்மைபேரிற் பிள்ளைக்கவியென்னும் பிரபந்தம்பாடிச் சுந்தரேசன் ஆலயத்தில் வேதப் பிராமணரும் அரசன்முதலியோரும் கேட்ப அரங்கேற்றிக் கொண்டுவரும் நாளில் ஒருநாள் மீனாட்சியம்மை அந்த ஆலயத்தின் அர்ச்சகருடைய குழந்தையைப்போல் வடிவங்கொண்டு அரசனது மடியிற் சென்றிருப்ப

அரசனும் மற்றுஞ்சபையோரும் அர்ச்சகருடைய குழந்தை வழக்கப்படி வந்திருக்கிறதென்று நினைத்திருபப அச்சமையத்திற் பாடின பிள்ளைக்கவியைக் கேட்டு அரசன் மடியிலிருந்த குழந்தையியப்புற்றுச்சிரக்கம்பஞ் செய்தது. அந்தக்கவி என்னவென்றால்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்
சுவையே யகந்தைக்கிழங்கை யகழ்ந்
தெடுக்குந் தொழும்பருளக் கோயிற்
கேற்றும விளக்கே வளர்சிமைய
இமையப்பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள்ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
டடுக்குங் குழற்காடேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத்துவசன் பெற்றபெரு

வாழுவே வருக வருகவே

இதற்கடுத்த கவியைப்பாடின பின்பு அந்தக்குழந்தை அரசன் அணிந்திருந்த முத்தாரத்தைக் கழற்றிப் பாடிக்கொண்டிருந்த குமரகுருபரருடைய கழுத்திலேபோட்டுவிட்டுக் காணாமல் மறைந்தது.

### அந்தக்கவி

பெருந்தேனிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருகப் பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைக்கும் பரமானந்தத்தின்
விளைவே வருகப்பழமறையின்
குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருகத் திருக்கடைக்கண்
கொழித்தகருணைப் பெருவெள்ளங்
குடைவார்பிறவிப் பெரும்பிணிக்கோர்

மருக்கேவரா கப்பசுங்குதலை மழலைக்கிளியேவருகவே
மலையத்துவசன் பெற்றபெருவாழ்வே வருகவருகவே.

உடனே அரசனும் கூடியிருந்த சபையிலுள்ளோ
ரும் இது என்ன ஆச்சரியமாயிருக்கின்றதென்று சந்தே
கித்து அர்ச்சகர் வீட்டில் விசாரிக்கவே குழந்தை வீட்
டைவிட்டு வெளியேபோகவில்லை. இதோ நித்திரைசெ
ய்கின்றதென்று அந்த அர்ச்சகருடைய வீட்டிலுள்ளோ
ரசொல்லத் திரும்பிவந்து சேவகர் சபையிலிருக்கின்ற
அரசனுக்கறிவிக்கவே மீனாம்பிகையே யித்திருவிளையா
டல் கொண்டருளினளென்று அரசனும் சபையிலுள்
ளோரும் நிச்சயித்தார்கள்.

பின்பு பிள்ளைக்கவிமுழுவதும் அரங்கேற்றி முடி
ந்ததினத்தில் அரசன் குமரகுருபரரை சிறுத்திச்சிரகவ
ரை குவியும்படி கனகாபிஷேகஞ் செய்தனன்.

அந்தத்திரவியத்தையெல்லாம் எந்த இடத்துக்கனு
ப்பும்படி யெழுத்தனுப்புவோமோ அந்த இடத்துக்கனு
ப்பும்வரை யிங்கிருக்கட்டுமென்று அரசனிடத்தில் வைத்
துவிட்டுத் தலதரிசனத்துக்குப் பிரயாணமானார்.

## குமரகுருபரருக்கு கனவிலுபதேசமான அற்புதம்

குமரகுருபரர் மதுரையிலிருந்து தலதரிசனைத்துக் குப பிரயாணமானவர வயித்தீசுரன் கோவிலுக்குச சமீபிக்கவே சுப்பிரமணியமே வந்து என்பேரிலும் பிள்ளைக் கவிபாடென்று குமரகுருபரர் ஏறிச்செலலுஞ் சிவிகையை மறித்துக்கொணடு திருவுளமபற்றவே பாடவேண்டியதெல்லாம் உமது தாயின்பேரிற் பாடியாயிற்றென்று குமரகுருபரர் மறுக்க ஈமது பேரிலும் பிள்ளைக்கவி சொலலத்தான் வேண்டுமென்று மீண்டுமுறைக்க அநத இடத்திலுந்தங்கியிருந்து பிள்ளைக்கவிபாடிப் பின்பு தலங்கள்தோறுந தரிசனஞ்செய்து கொணடும் வேதவாகமங்களைப் பிரசங்கஞ்செய்து கொண்டும் சாஸ்திரிகளோடு தருக்கஞ்செய்துகொண்டும் அப்படியே தருக்கஞ்செய்வதில் ஒருவரும் இவருக்கு எதிர்த்து நில்லாமையால் தமக்குக் கனவிலுபதேசிக்குங் குரு எங்குளரோவென உள்ளத்தில் தேட்டமுற்றுப் பிரயாணமானவர் தருமபுர ஆதீனத்திற்சென்றனர். இவர்வரவைக்குறித்தும் ஆதீனங்களிலுள்ள பெரியோர்களையும் சாஸ்திரவல்ல

வர்களையும் தருக்கஞ்செய்து வென்றுகொண்டும்வருகிறு ரென்பதை அந்தத்தருமபுர ஆதீனம் மஹாசந்நிதானம் மாசிலாமணிதேசிகரிடம் தம்பிரான்களும் மற்றுமுள்ளோர்களும் அறிவித்தனர். அதற்கு மஹாசந்நிதானம் மாசிலாமணி தேசிகர் இவ்விடத்துக்கு வரட்டுமென்று சொல்லிக்கொண்டு கெம்பீரமுற்றெழுந்தருளிப் பெரியபுராணத்தையும் முன்வைத்துப் பாரவையிட்டுக்கொண்டிருக்கவே குமரகுருபரரும் கர்வத்தோடு உத்தரியந்தோளிலிட்டு வணங்காது, வந்திருந்து, அதென்ன புத்தகமென்று கேட்டனர். தேசிகர் பெரியபுராணமென்றார், குமரகுருபரர் வாசிக்கவேண்டுமென்று சொல்லவே தேசிகர்

ஐந்துபேரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங்கர
ணங்கணான்குஞ் சிந்தையேயாகக் குணமொருமூன்று
ந் திருந்துசாத்துவிதமேயாக, இந்துவாழ் சடையானாடு
மானந்த எல்லையில் தனிப்பெருங்கூத்தின், வந்தபேரின்
ப வெள்ளத்துட்டிளைத்து மாறிலாமகிழ்ச்சியின் மலர்
ந்தார்.

என்றதிருப்பாடலை வாசித்து இதன் அருத்தத்தை

ச்சொல்லுகவென்று அருளவே குமரகுருபரர் நாவு
தடுமாறி எதிர்மொழி மொழியாமல் திடீரென்று எழு
ந்து தோளிலிட்டிருந்த உத்தரியத்தை யிடுப்பிற் கட்
டிக்கொண்டு சிரமேலிருகையுங் குவித்து மாசிலாமணி
தேசிகரை மூன்றுதரம் பிரதட்சணம் வந்து அடியற்ற
மரம்போல விழுந்து நமஸ்கரித்து எழுந்து நின்று வ
ணக்கத்துடன் வாய்பதற உடல்பதற நடுங்கி நாயேனை
யடிமைகொள்ள வேண்டுமென்று விண்ணப்பஞ் செ
ய்தனர்.

அதைச் செவியுற்ற தேசிகர் உனக்கு ஆணவமல
மறவில்லைச் சிதம்பரத்திற் போய்ப் பத்துமாதம் பிச்
சை யெடுத்து அருந்திப் பின்பு வரலாமென்று கட்ட
ளை யிட்டனர்.

அந்த உத்தரவைச் சிரமேற் கொண்டு சிதம்பரத்
துக்குப் போய்ப் பத்துமாதம் பிச்சை யெடுத்து அருந்
தி நடேசரை த்தரிசித்துக் கொண்டிருந்து பின்பு தரு
மபுரத்துக்கு வந்து தேசிகர் சந்நிதானத்திற் காத்திருக்
கவே ஞானோபதேசஞ் செய்து அசைவற இருத்தினார்.

குமரகுருபரர் மதுரை யரசனிடத்தில் வைத்திரு ந்த திரவியத்தை வருவித்துத் தேசிகருக்குப் பாதகா ணிக்கையாகச் செலுத்த எத்தனிக்கவே தேசிகர் உன க்கு அபிஷேகஞ்செய்த நிர்மாலியமாதலால் உதவா தென்று மறுத்தனர்.

அதற்குக் குமரகுருபரர் இந்தத் திரவியத்தை யெ ன்ன செய்யட்டு மென்று கேட்டதற்குத் தேசிகர் காசி யிற் கொண்டுபோய்த் தருமஞ் செய்து போடென்று உத்தரவுசெய்ய அந்தத் திரவியத்தைத் தருமபுர ஆதீன த்தைச் சேர்ந்த திருப்பனந்தாள் மடத்தில் வைத்து வி ட்டுக் காசிமா நகரம் போய்ச் சேர்ந்து விசுவேசரைத்த ரிசித்துக் கொண்டிருக்கும் நாளில்

ஒருநாள் காசியரசனுகிய நபாவும் அவர் குருவும் தனித்திருக்குஞ் சமயத்தில் அரசன் உத்தரவு பெற்றுக் கொண்டு உட்பிரவேசித்தவர் அவர்களிருவரிருக்கும் இருப்புக்குச் சரியாயுள்ள ஒரு நாற்காலியி லுட்கார்ந்த னர்.

அதுகண்டு நபாவின் குரு விசனமடைவதை நபாவு

அறிந்து கண்சாடையால் நிறுத்தவே நபாவின் குருவும் குமரகுருபரரும் பொதுவான சாஸ்திர விவகாரம் பேசிக் கடைசியில் எல்லாம் ஒன்றுதானென்று முடிந்தது.

அப்படி விவகாரம் முடியவே நாமெல்லாரும் ஒன்றாயிருந்து சாப்பிடலாமல்லவாவென்று நபாவின் குரு கேட்கக் குமரகுருபரர் ஒப்புக் கொள்ள நாளைத்தினம் நம்முடன் சாப்பிட வரவேண்டுமென்று சொல்ல அதற்குக் குமரகுருபரர் சம்மதித்துத் தமது ஆச்சிரமத்துக்கு வந்துவிட்டனர்.

அதறிந்த சைவர்களெல்லோரும் குமரகுருபரர் இது வரை தவறாமல் நடந்துவந்தவர் இப்போது நபாவின் குருவுக்குள்ளகப்பட்டுப் போனாரென்று கவலையுற்றிருந்தார்கள்.

மறுநாள் குமரகுருபரர் வழக்கப்படி சிவாருச்சனை செய்து முடித்துக்கொண்டு சிவாருச்சனை செய்த செவ்வரளிப்புஷ்பத்தை யொருதாம்பாளத் தட்டில் வைத்து அதன் மேலொரு காவி வஸ்திரத்துண்டைப்போட்டு மூ

டிப் பிறர்பார்வைக்கு மாமிசக்கறிபோலச் சிவப்பு நிறத்தைக் காட்டத்தக்க தோற்றத்தைக் கொடுக்கவுஞ் செய்து தமது தபசுப்பிள்ளை கையிலே கொடுத்துத் தமக்குப் பின்னாலவனை யிட்டுக்கொண்டு போனவர் நபாவின் அரண்மனை வாயிலில் அந்தமனிதனை நிறுத்திப்போட்டு இவர்உட்பிரவேசித்துநபாவுக்கும் அவர் குருமுதலானவர்களுக்குமாக ஆய்த்தமாயிருந்த போசனபந்தியிற் சென்று அவர்களுடன் இதென்ன கறி இதென்ன கறி யென்று ஒவ்வொன்றையும் சுட்டிச் சுட்டிக் குமரகுருபரர் கேட்க அதற்கு நபாவின் குரு இது ஆட்டுக்கறி இது மாட்டுக் கறி இது கோழிக் கறி யென்று சொல்லக் குமரகுருபரா இன்னும் ஒரு கறி நமக்குப் பிரியமாயுள்ளது வரவில்லை.

அந்தக்கறி இதோ அரண்மனை வாயிலில் நம்முடன் வந்த வேலைக்காரன் கையில் வைத்துக்கொண்டு நிற்கிறான். அவனையழையென்று நபாவின் வேலைக்காரரிலொருவனையேவவே.

நபாவின் குரு இவன்கொண்டு வந்திருப்பது பன்றிக்கறியாகவேயிருக்கும் நாம் இவனை மோசப்படுத்த

வேண்டுமென்று நினைத்தோம். இவனோ நமது மோச த்திலகப்படாமலும் மேலாவில் நம்மையும் மோசப்படுத் தும்படியான வழிதேடிக்கொண்டானென்று தீர்மானி த்துக் குமரகுருபரர் கையைப்பிடித்துக்கொண்டு இம் மட்டில் நிற்கட்டும் போதும் ஆனால் நீர் வாய்ச்சாமர் த்தியத்தினாலே வென்று போட்டீர் அதனாலே காரியம் ஒன்றுமில்லை எங்களுடன் நாயனிருக்கிறாரென்பதற்கு ச்சோதனையுண்டு.

அப்படியே உம்முடனே நாயனிருக்கிறாரென்ப தற்குச்சோதனை காட்டுவீராவென்று கேட்டனர்.

அதற்குக்குமரகுருபரர் என்னசோதனை சொல்ல வேண்டுமென்றனர்.

எங்கள் பிரதான பள்ளிவாசலில் ஐம்பதுபேர் கூடி ஒருமித்து அசைத்தால் சற்றே அசையக்கூடிய கனமுள்ள ஒருபெரிய சங்கிலி யுண்டு.

அதை வருடத்திலொருதரம் எங்கள் நபாவு தனி மையாய் நின்று இருகையாலும்பிடித்து அசைப்பார் அது நன்றாயசையும் இதுவே சோதனை.

அது உம்மாற் கூடுமோ என்றனர்.

அதற்குக் குமரகுருபரர் அந்தப்படி நானும் சோத னைகாட்டினுல் எனக்கு என்னதருகிறது அதையுங்கள் நபாவின் வாயினுலே சொல்லவேண்டுமென்றனர்.

நபாவு குமரகுருபரரைப்பார்த்து நீர் கேட்டதெல் லாம் தருவேன்.

அந்தச்சோதனையிற்றவறிப்போனுல் நீர் என்னதரு வீரென்று கேட்டார்.

அதற்குக் குமரகுருபரர் நான் பரதேசி. என்னிட த்தில் வேறுயாதொன்றுமில்லை. ஆதலால் என் தலையை த்தந்துவிடுவேனென்றுர். அதற்கு நபாவுஒப்புச்கொண் டு அந்தப்படி பலரறிய வெளியரங்கமாகப் பள்ளிவாச லின் முன்பாகப் பரிக்ஷிப்பதற்கு ஒருதினத்தைக்குறிப் பிட்டு அந்தத்தினத்தில் இருதிறத்தாருங் காசிமா நகர த்திலுள்ளவர்களும் பள்ளியிற் கூடிவந்து நிற்கும்பொ ழுது குமரகுருபரர் நபாவின் குருவைப்பார்த்து உங்க ள்நபாவு இந்தச் சங்கிலியை யெப்படி யசைப்பரென்ற தற்குஇருகையாலும்அசைப்பரென்றுர். அதற்குக்குமா

குருபரர் இருகையாலசைப்பதைப்பார்க்கிலும் ஒருகா லாலசைப்பது அருமையல்லவா வென்றார். நபாவின் குரு ஆமென்று ஒப்புக்கொள்ளவே குமரகுருபரர் ஒரு கயிறுகொண்டுவரச்செய்து அந்தக்கயிற்றைத் தமது காலுக்குஞ் சங்கிலிக்குமாகக்கட்டிச் சங்கிலியை யிழுத்துக்கொண்டு பள்ளியை மூன்றுதரஞ் சுற்றிவந்தார். அவருக்கு அந்தப்பாரமான சங்கிலி ஒரு ஓலைக்கொடி மாத்திரமாயிருந்தது கடைசியிற் பள்ளிவாசலின் முன்பாகநின்றுகொண்டு காலை யெற்றினார் சங்கிலி அரைப்பனை உயரத்துக்கு உயர்ந்து கீழேவிழுந்து துண்டுதுண்டாக முறிந்து போயிற்று. அதுகண்டு நபாவு முதலிய துலுக்கர்களும் காசிமா நகரத்திலுள்ள மற்றயாவரும் இந்தக்குமரகுருபரரிடத்தில் கடவுள் கிருபை பூரணமாயிருக்கின்றதென்று பயமும் பக்தியும் வைத்தார்கள்.

நபாவு சொன்னவாக்குத்தவறாமல் குமரகுருபரர் கேட்டுக்கொண்டபடி மிகுந்தவரும்படியுள்ள ஒரு பெரிய ஜமீனையும் தாமும் தம்மைப்பற்றிய துலுக்கர்களும் வாசஞ்செய்து கொண்டிருந்த மாளிகைகள் பள்ளிவா

சல்கள் முதலிய இடங்களையுங் கொடுத்துப்போட்டுத் தூரமான இடத்திற் போயிருந்து கொண்டார்.

குமரகுருப்பரர் அந்த இடங்களிலுள்ள கட்டிடங்களை யெல்லாம் இடித்துப் பெரிய மடங்கட்டுவித்தார் மடங் கட்டுகிற செலவுக் கெல்லாம் திருப்பனந்தாளில் தாம் வைத்திருந்த திரவியத்தை வருவித்து உபயோகித்தார். பிந்தியகாலத்தில் துலுக்கர்கள் அடாதவண்ணம் தாம் கட்டிய மடத்தின் கற்சுவர்களிற் பன்றி வடிவம் அடிப் பித்திருக்கிறார் அந்தமடத்துக்கு அநேக அரசர்கள் மா னியம் விட்டிருக்கிறார்கள். காசியில் இப்போது அறுப த்திரண்டு சத்திரம் குமரகுருபரருடையனவாக இருக்கி ன்றன.

## கவனிப்பு.

இவர் ஐந்து வயதுவரை ஊமையாயிருந்துசுப்பிர மணியம் கனவில் உபதேசித்தவுடன் இப்போது அச்சி ட்டு வழங்கப்படுகிற கலிவெண்பா வென்னும் அற்புத மான பிரபந்தத்தைப் பாடி யிருக்கின்றார்.

உலகத்தார் சைவசமயத்தைவையுறுதிருக்கும்பொ

ருட்டு உலகத்திற்கும் வேதத்திற்கும் முதற்காரணனெ வனே அவனாலேயே இப்படி நடப்பித்திருப்பதென்று அறிவாளருக்கு விளங்கும்.

இதற்குமுன் ஆயிரம்வருஷகாலத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களும்,

அதற்கு ஐந்நூறு வருஷகாலத்திற்குப்பின் மெய் கண்டதேவரும்.

அதற்கு இருநூறு வருஷகாலத்திற்குப்பின் இந்தக்குமரகுருபரரும்,

இவர்களுக்கு முந்தியும், பிந்தியும் அநேக பரம சாதுக்களும்,

ஒவ்வொரு ஆச்சரியமான அற்புதங்கள் நடப்பித்திருப்பதை,

உற்றுணர்ந்து பார்க்கில் சைவ சமயமே யுண்மை யான சமயமென்று விளங்கும்.

இப்படிப்பட்ட ஒவ்வொரு பரமசாதுக்களைப்பற்

றிச் சிந்திக்கும் சிந்தனையே முத்தி யென்கின்ற மண் டபத்திற் கேறிச்செல்கின்ற படியாயிருக்கின்றது இதைச் சிந்திக்கச் சிந்திக்க உலக மயக்கமற்றுவிடும். ஞான நிஷ்டை கூடும். அது கூடவே அறிவில் நாளுக்கு நாள் வளர்ந்து அறிவே சொரூபமாவன். ஆணவ முதலிய மலங்களெல்லாம் போன இடந் தெரியா.

இந்தப் பேற்றைப் பரமசிவம் நம்மெல்லாருக்கும் அநுக்கிரகஞ் செய்வதாக.

இந்தக் குமரகுருபரர் தமக்கு அரசன் கனகாபிஷேகஞ் செய்த பொருளைத் தமது மாதா பிதா சகோதரர் இஷ்ட பந்துக்கள் முதலானவர்களுக்குந் தமது தேகசவுக்கியத்துக்கும்உபயோகப்படுத்தி யிருப்பாராகில்அசுத்த மாயையையுடையவரென்று நினைக்கலாம். அப்படிக்கில்லாததால் அவர் அசுத்த மாயையைக் கடந்தவர் தான்.

அந்தத்திரவியத்தை ஒரு பொருளெனக்கருதாமல் பட்டினத்தாரைப்போலத் தேவை யுள்ளவர்களெடுத்துக்கொண்டுபோகலாமென்று சூறையிடாதிருந்ததினாலே இவர்முழுவதும் மாயையைக்கடந்த வருமலர்.

இவர் அந்தத்திரவியத்தை யொரு பொருளாகக் கருதிக் குருவுக்கு உபயோகப்படுத்த வேண்டுமென்று பத்திரப்படுத்தியதால் சுத்தமாயையில் நின்றவரென்று சொல்லலாம்.

இவர் தமது அருளாசிரியராகிய மாசிலாமணி தேசிகருக்கு அந்தத்திரவியத்தை வருவித்துப் பாதகாணிக்கையாகச் செலுத்த எத்தனித்தபோது மாசிலாமணிதேசிகர் அந்தத்திரவியத்தை யொரு பொருளென மதியாமல் இது உனக்கு அபிஷேகித்த நிற்மாலியம் ஆதலால் தூரக்கொண்டுபோவென்று தள்ளிப் போட்டதிலுலே தேசிகர் மாயையைக்கடந்த மூர்த்தி.

இதனுலே மாயையில் ஆன்மாக்கள் அமிழ்ந்தி நிற்பதின் தன்மையையும் நீங்கிநிற்பதின் தன்மையையும் அறிந்து கொள்வோமாக.

## கோபுரங் கட்டிய அற்புதம்.

திருநெல்வேலி நாட்டிலுள்ள திருச்செந்தூரில் திருவாவடுதுறை ஆதீனத்துத் திருப்பணி மடம் என்றெரு மடமிருக்கின்றது.

அந்த ஆதீனத்திலிருந்து தேசிகமூர்த்தி சுவாமிகள் என்ற ஒரு தம்பிரான்வந்து இந்தத் திருப்பணி மடத்து விசாரணை செய்து கொண்டிருந்தார்.

அவர் அக்காலத்தில் திருச்செந்தூர் ஆலயத்தில் இப்போதிருக்கிற கீழக்கோபுரத்துக்கொப்பாக மேலக்கோபுரமுஞ் சிறிதாயிருந்ததை யிடித்துப்போட்டு இப்போதிருக்கிற பெரிய கோபுரத்தைக் கட்டினார்.

அவர் அது கட்டிய வேலைக்காரருக்கெல்லாம் சம்பளத்துக்கும் சுண்ணம்பு முதலிய சாமான்களின் கிரையத்துக்கும் விபூதியை யெடுத்துக் கொடுப்பார். அதை வேலை செய்த ஜனங்கள் வாங்கி முந்தாணியில் முடிந்து கொண்டு போய்ப் பின்பு அதை அவிழ்த்துப் பார்த்தால் அந்த வேலைக்காரர் எவ்வளவு வேலை செய்திருக்கிறார்களோ அவ்வளவுக்குத் தகுந்த கூலி மாத்திரமிருக்கும்.

சிலவேளை யிரும்பைத் தங்கமாகச் செய்து அந்தத் தங்கத்தை விற்றுச் செலவிடுவார். இப்படியே அந்தக் கோபுரத்தைக்கட்டி முடிப்பித்தார்.

கடைசியில் அந்தக் கோபுரத்துக்கு வன்னம் வைப்

பதற்கு சிவப்புக் காவியும் வெள்ளைக்காவியும் அந்த ஆலயத்தின் வடவருகில் வெட்டி யெடுப்பித்தார். பிந்திய காலத்தில் மற்றவர்கள் வெட்டிப் பார்த்ததில் மண்ணாகவிருந்ததே தவிரக் காவியாகப்படவில்லை.

இந்த அதிசயத்தைப்பற்றி யெப்போதும் அந்த நகரத்திலுள்ள சிறியோர் பெரியோரெல்லாம் பிரஸ்தாபித்துக் கொள்ளுகிறார்கள்.

இது நடந்து சற்றேறக்குறைய இருநூறு வருஷமாயிற்று.

இந்தத் தம்பிரான் விஷயமாகப் பரமசிவம்சாம்பலை வெள்ளிக் காசாகவும் செம்புக் காசாகவும் செய்திருக்கிறது. இரும்பைத் தங்கமாகச் செய்திருக்கிறது. மண்ணை சிவப்புக் காவியும் வெள்ளைக் காவியுமாகச் செய்திருக்கிறது.

வேலை செய்த ஜனங்களுக்குத் தம்பிரான் கையிலுள்ள சாம்பலை யெடுத்துக் கொடுப்பதும் வெள்ளிக்காசு செம்புக்காசை யெண்ணாமலெடுத்துக் கொடுப்பதும் அவரவர்கள் வேலைக்குத்தகுந்தகூலி மாத்திரமிருக்கும்

ஆதலால் அவரவர்களே ஜாக்கிரதையோடுவேலைசெய்து வருவார்கள். ஆதலால் ஏவலாளிகள் நின்று ஏவவேண்டுவதில்லை. கணக்கெழுத வேண்டுவதுமில்லை. இந்த அற்புதத்தைப்பற்றி யென்ன சொல்ல.

இதை யுணராமல் உலகத்திற் சிலர் தங்கள் சாமர்த்தியத்தினால் இவ்வளவு திரவியத்தைச் சம்பாத்தியஞ் செய்து போட்டோமென்றும், இவ்வளவு பெரிய வீட்டைக்கட்டினோமென்றும், இவ்வளவு பெரிய சத்திரத்தைக் கட்டினோ மென்றும், இவ்வளவு பெரிய ஆலயத்தைக் கட்டினோமென்றும், நாடோறும் இவ்வளவு திரவியத்தை தருமத்துக்காகச் செலவுசெய்கிறோமென்றும், ஆலயச்சிறப்புக்காகவருடந்தோறும் இவ்வளவு திரவியத்தைச் செலவிடுகிறோமென்றும், தாங்கள் கட்டியிருக்கிற சத்திரத்தில் நாடோறும் வருகிற ஜனங்களுக்கெல்லாம் அன்னதானஞ்செய்கிறோமென்றும், நினைப்பார்கள். அப்படி நினைத்தால் ஆணவ மலத்தாலுண்டாகும் மதச்செருக்கு என்னப்படும்.

ஆணவமலம் நீங்கினவர்கள் அப்படி நினையாமல் எப்படி நினைப்பார்களெனில் நம்மைப் பார்க்கிலும் எத்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS

தனை மடங்கோ புத்திசாலிகளாயும் சாமர்த்திய வான்களாயும் பொருள் சம்பாதிக்கும் விஷயத்தில் இடைவிடாது முயற்சி செய்கிறவர்களாயுமிருக்க அவர்களுக்கெல்லாம் திரவியம் கைவசப் படாமலும் முன்னிருந்த திரவியமும் சேதப்பட்டுத் தரித்திரராயுமிருக்கிறார்கள்?

ஆதலால் மனிதச் செயலாலே யாதொன்றும் நடப்பதில்லை. நம்மிடத்தில் பொருளைக் கொடுத்து எல்லாம் நடத்தியது பரமசிவமே யன்றி வேறில்லை யென்று நினைந்து அடங்கி எவ்வளவும் கர்வங்கொள்ளாமல் பரமசிவத்தினது திருவடியைச் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள்.

இப்படி நினைப்பதுவே யுண்மை யறிவு.

இந்தக கோபுரங் கட்டிய தம்பிரான் எவ்வளவும் பொருளில்லாத எழை. அவருக்கு உதவிசெய்கிற மனிதர்களொருவருமில்லை.

அப்படியிருக்க பரமசிவத்தின் திருவருளாலேயே யிப்படி நிறைவேறியிருக்கின்றது.

நல்லது இது இருக்கட்டும்.

முந்தியகாலத்தில் பாண்டி நாட்டை ஆளுகை செய்து வந்த ராயர் என்பவர் சிலபிரதான ஆலயங்களி ல் உன்னதமாக ஒவ்வொரு கோபுரங் கட்டவேண்டு மென்று ஆரம்பித்து ஒவ்வொரு இடங்களிலும் உத்தே சம் லட்ச ரூபாய் வரை செலவிட்டுக் கோபுர வேலை நடந்து அப்பால் ஒன்றும் நடவாமல்நின்று போயிற்று. நிறைவேற வில்லை. உலகத்தில்ஒருவன் தொடுத்த காரி யம் ஏதாவது நிறைவேறாதிருந்தால் மற்றவர்கள் இன் ன மனிதன் ஆரம்பித்த இன்ன காரியம் நிறைவேறாமல் ராயர் கோபுரத்துக்கு அடிப்போட்டதுபோல இருக்கி ன்றதென்று வசை யெடுத்துக் கூறும்படியாய் நிலை நின்று போயிற்று.

ஒன்றுமில்லாத ஏழைச்சந்நியாசி பிறரிடத்தில் ஒரு துட்டேனே பட்டது பெற்றுக்கொள்ளாதிருந்தும் தொடுத்த வேலை எப்படி நிறைவேறியிருக்கின்றது.

எவ்வளவோதிரவியங்களை வைத்திருந்தவராகவும் உலகத்தை ஆளுகைசெய்கிற அரசராகவுமிருந்த ராயர்

என்பவர் தொடுத்த வேலை யெப்படி முற்றுப்பெறுமல் நின்று போயிற்று.

அரசனும் சந்நியாசியும் கோபுரங்கட்டிய சங்கதி யொன்றையும் உற்றுணர்ந்து பார்க்கில் எல்லாம் பரமசிவத்தின் செயலேயன்றி வேறில்லை என்றுஎப்படிப்பட்ட மூடர்களுக்கும் விளங்கும்.

அப்படி உள்ளபடி விளங்கியதாயிருந்தால் பொருளினுலும் கல்வியினுலும் செயலினுலும் எவன்தான் பெரியவனுய்ப் போனுனென்று சந்தோஷித்துகர்வங் கொள்வான்.

எவன்தான் சிறியவனுய்ப் போனுனென்றுகவலையுற்றுப் பயம் அடைவான் அதை யுணர்ந்தவர்களுக்கு இன்பம் இன்பமுமன்று துன்பம் துன்பமுமன்று பெருமை பெருமையுமன்று சிறுமை சிறுமையுமன்று எல்லாம் சமமாகவேதோன்றும்.

அந்தத்தோற்றத்தையுடைய இருதயமே பரமசிவத்துக்கு ஆலயமாகும்.

ஆதலால் இப்படி ஒவ்வொன்றையும் உற்றுணர்ந்து உண்மையறிவானந்தத்தை யநுபவிக்கும்படி நம்மெல்லாருக்கும் பரமசிவம் கிருபைசெய்வதாக.

மடத்துநிலத்திற்கு மழைபெய்த அற்புதம்.

தருமபுரம் ஆதீனத்தில் ஒருகாம் பெரியபட்டமும் சின்னப்பட்டமுமிருந்தன.

ஒரு நாள் சின்னப்பட்டத்திலிருந்த மூர்த்தி மஹா சந்நிதானத்தின் முன்பாகவந்து அடியேன் இல்லறத்திலிருந்து விடாய்தீர்ந்து வரும்படியாக உத்தரவாக வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தனர்.

அதற்கு மகாசந்நிதானம் ஒப்புக்கொண்டு கலியாணஞ் செய்துகொள்வதற்குத் திரவியமுங் கொடுத்துக் காலக்ஷேபத்திற்குமடத்து நிலத்திற் சிலநிலமும்விட்டுக்கொடுத்து அனுப்பிவிட்டது.

சின்னப்பட்டத்து மூர்த்தி அவைகளைப் பெற்றுக்கொண்டு கிராமத்துக்கு வந்து ஒருபெண்ணைக் கலியா

ணஞ் செய்துகொண்டு நிலத்தைப் பயிர்செய்வித்துக் காலக்ஷேபஞ் செய்துகொண்டிருக்கும்போது ஒருதரம் மழைத்தாழ்வினுல் குளத்திலுள்ள நீரை ஊர்வழக்கப்படி முறைவைத்துப பயிர்களுக்குப் பாய்ச்சிக்கொண்டு வரும்போது இவருடைய நிலத்துக்குந் தண்ணீர் விடவேண்டுமென்று இவருடைய காரியக்காரன் கிராமத்தாரிடத்திற்கேட்டான்.

அதற்கவர்கள் உமது எஜமான் துறவறத்திலிருந்து இல்லறததிற்கு வந்து விட்டவராதலால் நல்ல யோக்கியர்தான் அவருடைய நிலத்துக்குத் தண்ணீர் விடுகிறதில்லையென்று நிந்தித்துவிட்டார்கள்.

அதை அந்தக்காரியக்காரன்சின்னப்பட்டத்திலிருந்துஇல்லறத்துக்கு வந்திருக்கிற மூர்த்தியிடத்திலறிவிக்கவே அவாஒரு ஓலைச்சீட்டில்ஒருவெண்பாவை யெழுதி அந்தச்சீட்டைத் தமது வயலிற்புதைக்கும்படி கட்டளையிட்டனர் அந்தப்படி காரியக்காரன்செய்தான்.

உடனே இவருடைய வயல்களின் மட்டுக்கும் மழைபெய்து விளைந்தது.

இதுகண்டு யாவரும் இவர் துறவறத்திலிருந்து இல்லறத்துக்கு வந்தபோதிலும் இவர் பெரியவர்தானென்று அறிந்து இவரிடத்தில் வந்து புகழ்ந்து தோத்திரஞ்செய்து பணிந்தார்கள் முன்பு நிந்தித்தவர்களும் அப்படியே பணிந்து மன்னிப்புப் பெற்றுக்கொண்டார்கள்.

சீட்டிலெழுதிய வெண்பா.

சைவசமயஞ் சமயமெனிலச் சமயத்
தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனில் — வையத்
தானந்த வெள்ளத் தழுந்துவதே முத்தியெனில்
வானங்காள் பெய்கமழை

அந்த நிலம் இப்போது திருநெல்வேலி ரெயில் ஸ்டேஷனாயிருக்கின்றது. அந்தக்காலம் திருநெல்வேலி நாட்டையாண்ட நபாப் துரைத்தனத்தார் அறிந்து இந்தப்பெரியவருக்குச் சிலமானியம் விடப்பட்டு அந்தமானியம் இப்போதும் தருமபுரம் ஆதீனத்துக்கு நடந்துவருகிறது.

அவர் எல்லாம் மூன்று வருஷக்காலம் இல்லறத்தி

விருந்து பின்பு பழயபடி துறவடைந்து பட்டத்துமூர்த்தியாயிருந்தனர்.

## கவனிப்பு.

மழை யியல்பாய் வருஷிக்கும் சமயமாயுள்ளது இந்த மூர்த்திகள் விரும்பிய சமயமும் கருவியுமிருந்தது பனம்பழமும் விழுந்தது என்பதுபோலாக மாட்டாதா.

இந்த மூர்த்திகள் ஆக்கினைப்படிதான் மழை பெய்ததென்று எப்படித் தீர்மானிக்கலாமெனில்.

ஒவ்வொரு சமயங்களில் அரைமயில் சவுக்கம் அல்லது ஒருமயில் சவுக்கம் அல்லது பத்துச்சதுரமயில் ஐம்பதுசதுரமயில் நூறுசதுரமயில் விஸ்தீரணம் பெய்யும்.

அப்படிக்கில்லாமல் அந்த மூர்த்திகள் பயிர் செய்வித்திருந்தது அக்காலத்துக் கணக்குப்படி மூன்று கோட்டை விளைப்பாடு இக்காலத்துக் கணக்குப்படி சற்றேறக்குறைய ஐந்து ஏக்கர் நிலமாகின்றது அவ்வளவு

நிலமட்டுக்கும் மாத்திரம்மழைபெய்தது போதுமானதா யிருந்ததுமன்றி அக்கம்பக்க நிலங்களுக்குபயோகப் படு வதற்கிடமின்றி இந்தஐந்து ஏக்கர் நிலமட்டும் வரம்புய த்துரச்சுத்தண்ணீர் நின்று விளையும்படி ஆச்சரியமாய் நேரிட்டதால் இந்த மூர்த்திகள் ஆகமினைப்பிரகாரம் பெ ய்ததேயன்றி இடல்பாகப்பெய்ததென்று எவ்வளவுஞ் சந்தேகிப்பதற்கிடமில்லை.

ஆதலால் இதைப்பற்றி யோசிக்கும்பொழுது ஞா னிகளுக்குத் தேவர்களும் அடங்கியிருக்கிறார்களென் றுகிறது.

அப்படியானால் இவரைப்போல வேறு எந்த மகா ஞானிகள் நடப்பித்திருக்கிறார்களெனில்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலையுண்ட பாலனை யழைக்கும்போது அவர் கருத்தின்படி யமன் ஒரு நிமி ஷம் தாமதியாமல் நிறைவேற்றுதல் செய்திருப்பதையு ம் மதுரை யரசனாகிய கூன்பாண்டியன் முன்பு ஞான சம்பந்தரோடு சமணர் சமயவாதஞ் செய்தபோது ஞா னசம்பந்தர் எழுதிய ஓலைச்சீட்டையும் சமணர் எழு

திய ஓலைச்சீட்டையும் தீயிலிடவே சமணர் சீட்டு வெ
ந்துபோயிற்று. ஞானசம்பந்தர் ஆக்கினைப்படி அக்கினி
தேவன் நடந்ததினால் அவர் சீட்டு வேகாமற் பச்சை
யாயிருந்தது அவர் திருக்கூட்டத்துடன் செல்லுகின்
ற மார்க்கத்தில் அவருடைய சிவிகையை அக்கிரமமாய்
மறித்த ஒரு சமணனை நோக்கி அவருடைய சீஷர்களி
லொருவர் உன் தலையிலிடிவிழக்கடவதென்று சபித்த
போது அந்தச்சமணன் தலையில் இடிவிழுந்து இறந்து
போனான். ஆதலால் அக்கினிதேவன் ஞானிகளுக்கு
அடங்கியிருக்கிறான்.

வைகை நதியில ஞானசம்பந்தரும் சமணர்களும்
விட்ட ஏடுகளில் சமணர் விட்ட ஏட்டைத் தண்ணீர்
கீழ் திசைக்குக் கொண்டுபோய்விட்டது.

ஞானசம்பந்தருடைய ஏடு கீழ் திசைக்குச் செல்
லாமல் அவர் கருத்தின்படி எதிர்த்து மேல்திசைக்குச்
சென்றதாலும் சமணர்கள் அப்பர்சுவாமிகளைக் கற்றூ.
ணிற் கட்டி நடுச்சமுத்திரத்திற் கொண்டுபோய்ப் போ
ட்ட பொழுது தண்ணீர் அந்தக்கற்றூணையும் அப்பர்
சுவாமிகளையும் தாழவொட்டாமல் மிதந்து கரை வந்து

சேரும்படி செய்ததாலுங் கங்காதேவி ஞானிகளுக்கு அடங்கியிருக்கிறாள்.

துருவாசமஹா ரிஷியானவர் தேவேந்திரனிடஞ்சென்றபொழுது தேவேந்திரன் இவரைமதியாதிருந்ததால் இவர் சாபத்தினால் தேவேந்திரனும் அவனுடைய வெள்ளையானையும் பட்ட பாட்டைத் திருவிளையாடற் புராணத்தினாலறியலாம்.

சமணர்கள் அப்பர் சுவாமிகளைச் சுண்ணாம்பு அறையிலிட்ட காலத்தில் அப்பர் சுவாமிகள் கருத்தின்படி அக்கினிதேவன் நடந்திருப்பதைப்பற்றிப் பெரிய புராணத்திற் சொல்லியிருப்பதையும் புத்தர்கள் மாணிக்கவாசகரோடு சமயவாதஞ்செய்யுங் காலத்தில் மாணிக்கவாசகர் உத்தரவுப்படி சரசுவதிதேவி புத்தர்கள் நாவிலிருந்திறங்கிவிடவே புத்தர்கள் ஊமர்களானதையும் அந்தச்சரசுவதிதேவி ஊமையாயிருந்த ஒரு கன்னிகையின் நாவிலிருந்து பேசியதைப்பற்றித் திருவிளையாடற் புராணத்திற் சொல்லியிருப்பதையும் அநேகர் வெளிப்படையாயறிந்திருக்கிறார்கள். அன்றியும்சிவாக்கிய சோழமகாராஜன் சமஸ்தானத்தில் ஒரு வைணவர்

புத்திரராகவும் சிவநேசமுடையவராயுமிருந்த ஹரதத்த ரென்பவர் சிவனே பெரியனென்று வைணவர்களுக்கு எடுத்துக் காட்டியஇருபத்திரண்டு ஹேதுக்களையும் பழுக்கக்காய்ச்சிய இருப்பு முக்காலியிலிருந்துகொண்டு சொல்லும்பொழுது அந்த ஹரதத்தர் கருத்தின்படி அக்கினிதேவன் நடந்திருப்பதை வடநூலிலுள்ள ஹரதத்தர் சரித்திரத்திஞலறியலாம்.

இதுபற்றியன்றே.

வாசிட்டக்காரர்

செய்ய ஞானிதெரிசனமே தேவ தேவன் தரிசனமாம்
பொய்யிலவனுக்கி யற்றுபணிபூதநாதர்க்கி யற்றுபணி
என்று சொலலியிருக்கிறார்.

இப்படிப்பட்ட மகாஞானிகள் எழும்புவது சைவ சமயத்திலுண்டே தவிர மற்ற எந்தச்சமயங்களிலுண்டு.

அதனலேதான் தாயுமானவர் சைவ சமயமே சமயமென்றார்.

ஆனல் மற்றச்சமயங்களில் ஞானிகளில்லையோ வெனில் தேகத்தைப் போஷித்தல் பொருளையீட்டல்

அருந்தல் பொருந்தல்களிற் சுகத்தை யநுபவித்தல் சத்துருக்களை வெல்லுதல் முதலிய காரியங்களில் அதியூக முடைய விடைய ஞானிகளுண்டு

கடவுள் ஒருவர் உண்டென்று மூடபக்தியாயறிந்து அந்தக்கடவுளுக்கேற்க உலக விவகாரத்தில் மனோ சாட்சிக்கு விரோதமின்றி நடந்துவர வேண்டுமென்று மாத்திரம அறிந்து நடப்பவர்களும் பாவங்களை மன்னிக்க வேண்டுமென்றும் முத்தியைதர வேண்டுமென்றும் ஜீவபோதத்தால் தியானிப்பவர்களுமுண்டு.

இவ்வளவே தவிர ஆன்ம ஞானநூலுங்கிடையாது தவமுங்கிடையாது.

உலகத்தில் பாவ புண்ணியமென்றெண்ணுமல் மனம்போன போக்கிலே போகிறவர்களெல்லாம் மேடென்றும் பள்ளமென்றுந் தெரியாத சிறுவர்களுக்கொப்பாகும்.

இது பாவமென்றும் இது புண்ணியமென்றுந் தெரிந்து உலகவிவகாரத்தில் மனோ சாட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பவர்களெல்லாம் விளையாட்டிற் செல்லா

மல் தாய் தகப்பனுக்கு அடங்கி நடக்கிற பிள்ளைகளுக் கொப்பந்தம்.

இப்படி நடப்பவன் ஆன்ம ஞானியாய்விடமாட் டான்.

எப்படியெனில் தாய் தகப்பனுக்கு அடங்கி நடப் பதினுலே மாத்திரம் ஒரு பையன் கல்விமானுய்விடுவா ஞு? ஆய்விடமாட்டான்.

பள்ளிக்கூடத்திற் சென்று அவ்விடத்திலுள்ள மா ணுக்கரோடு சேர்ந்து உவாத்தியாயர் படிப்பிக்கும் புத்த த்சுதைப் படித்து மனதில் வைத்து வந்தாலொழியக் கல்விமானுகமாட்டான்.

அதுபோல மனேசாட்சிக்கு விரோதமில்லாமல் நடந்து வந்தபோதிலும் சைவசமயத்திற் சொல்லுகிற முறைப்படி முயன்ருலொழிய ஆன்ம ஞானியாகமாட் டான்.

ஒருவனை ஆன்ம ஞானி யென்றும், விடயஞானி யென்றும் அவனவன் வாயிலிருந்து வருகிறவார்த்தை களினுலறியலாம்.

சைவசமயத்திலுள்ள ஆன்ம ஞானிகள் பிரார்த்தனை.

நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத்திருக்கரக் கோயிலான்
தன்கடம் மடியேனையுந் தாங்குதல்
என் கடன்பணி செய்து கிடப்பதே.

இதன் கருத்து

அடியேனை யிம்மையிலும் மறுமையிலுங் காப்பாற்ற வேண்டிய கடமை பரமசிவநாதனுக்கே. அடியேனுடைய கடமை சதாகாலமும் பரமசிவத்தினது பணிவிடை செய்துகொண்டு அவரது திருவருளிலமிழ்ந்திய சைவறநிற்பதென்பதாம்.

கிறிஸ்து சமய ஞானிகள் கருத்து அவர்கள் செப புத்தகத்தில்.

"அன்றன்றுள்ள அப்பத்தை யெங்களுக்கு இன்று தாரும்" என்று இருக்கின்றது.

இவர்களைப்போல சைவசமய ஞானிகள் அப்பத்தைத் தாரும் தோசையைத்தாரும் என்று கேட்கவில்லை

இதனுலே ஆன்ம ஞானி யின்னூர் விடைய ஞானி யின்னுரென்று அறிந்து கொள்ளவேண்டியது.

ஆனல் நாமெல்லாம் சைவசமயிகளா யிருக்கிறோம் நமக்கு எப்படியும் முத்தி கிடைக்குமென்று தீர்மானித்துக் கொண்டு விடைய ஞானமின்னது ஆன்ம ஞானமின்னதென்று யோசியாமல் விடயஞானத்திலேயே திரிந்து காலத்தைப் போக்கி விடாமல் ஆன்ம ஞான நூலையும் அந்த ஞானிகளையும் பற்றிக்கொண்டு ஆன்ம ஞானிகளாகும்படி பரமசிவத்தை நோக்கிப் பிரார்த்திக்கவும் விடய ஞானத்தைக் கைவிடவும் கடவோம் இந்தக்காலத்திலும் ஞானிகள் சைவசமயத்தில் எழும்பிக்கொண்டே வருகிறார்கள்.

எப்படியெனில் மதங்கொண்டு ஓட்டமுஞ் சாட்டமுமாய்த் திரிகின்ற யானையின் துதிக்கையை மலையாளதேசத்து அரசர்களில் கொல்லம் 1022ஞ நாடு நீங்கிய குலசேகரப்பெருமாள் மஹாராஜா எனபவர் எந்தா பற்பநாபா என்று சொல்லிக்கொண்டு பிடிக்க அது அடங்கிநின்றது.

அன்றியும் ஆலயத்தில்த் தரிசனைக்குப்போய் சித்

கிற சமயத்தில் வஞ்சனையினால் விஷம் போட்ட தீர்த்தத்தை அரசனுக்கு விடுகிற பட்டர் கைபதறுவதையறிந்து விஷம் போட்டிருக்கின்றதோ என்று அரசன் கேட்கப் பட்டர் ஒப்புககொள்ளவும் இது பற்பநாபன் சாப்பிட்டிருக்கிறதல்லவோ வென்று சொல்லிக்கொண்டு அதைச்சாப்பிட்டுப் போட்டார். விஷம் அவனை ஒன்றுஞ் செய்யவில்லை.

இப்படி அநேக காரியங்களினாலே அந்த குலசேகரப்பெருமாள் மஹாராஜா உண்மையாய்ப் பரம ஞானியென்றே யாவரும் தீர்மானித்திருக்கிறார்கள். விக்கிரமசிங்கபுரம் நமச்சிவாயக் கவிராய ரென்பவரை பாவவிநாச ஆலயத்தில் உலகநாயகி திருக்கரத்தோடு பொற்கம்பி போட்டுக்கட்டிய பூங்கிளி உமதுகையில் வரும்படி பாடுவீராவென்று அக்காலத்துச் சீமையதிகாரி கேட்கக் கவிராயர் ஒப்புக்கொண்டு அந்தாதிப்பிரபந்தம்பாடினார் அதில்

விண்டலநின்ற சரற்காலசந்த்ரசுவேதமுக
மண்டலமுங் கைமலரொழுதோரு மதிநுதலுங்
குண்டலமும் பெறுவாலப் பிராய குமாரத்தியாய்ச்
செண்டலர் செஙகை யுலகாள் வந்நாவிற்சிறந்தனளே

என்ற இந்தப்பாடல் முடிந்தவுடன் பொற்கம்பிபடப

டென்றுதெறிக்கவும் பூவிறைற கட்டிய இளி பராசக்தி க்கணிந்திருந்த மாலையில் ஒருபூவையுங் கொற்றிக்கொ ண்டு கவிராயா கையில் வந்திருந்தது

இந்த அற்புதத்தைப்பற்றி யென்ன சொல்லுகிறது

ஆழ்வாாதிருநகரியிலுள்ள கோனேரியப்பன் கவி ராயர் என்பவர்தமது காலில்அரசனுலிட்டிருந்தவிலங்கு முறியும்படி யந்தக்கவிராயரென்பவர் சுப்பிரமணியதை தைகோகுகிப் பிரார்த்தித்துப் பாட உடனே முறிந்தது

அந்தக்கவி.

செய்வதொன்றறிகிலன் செழுமென் போது தூட்
பெய்வதொன்றறிகிலஞ் பேதையேன்சுடர்
வைதிகழ் வேற்படை முருகவன்றனை
கொய்தெனக்கிரங்கியாட் கொள்ள வேண்டுமால்

காசியில் கணபதி சாஸ்திரிகள் என்று ஒரு பெரி யவர் அவர் நாலுமாதம் ஆறுமாதம் கங்கையில் மூழ்கிக் கிடப்பார். நாலுமாதம்இரந்துமாதம்நகரத்தில் வசிப்பார்ஒ வ்வொருதரம்நாற்பதுஐம்பதுவருஷம்சமாதியிலிருந்து

எழுந்திருக்கிறார் இப்படி ஐந்நூறு வருஷக்காலமிரு ந்திருக்கிறாரென்று தெரியவருகிறது. வாய் பேசுவது கிடையாது யாராவது அன்னம் படைத்துப் பிரார்த்தி த்தால் சாப்பிடுவார்.

இரண்டு வருஷத்துக்குமுன் அவரைப் பரிபூரண மானதாக நினைத்துச் சமாதில் வைத்திருக்கிறார்கள் இன்னம் ஒருவேளை சமாதிலிருந் தெழுந்தாலும் எழு வர் அவர் திருமேனி அகலம் ஒருகெஜமிருக்கும்வயிறு மடிப்பு விழுந்து முட்டுவரையுந் தொங்கும்.

இப்போது திருவொற்றியூரில் ஒரு பெரியவ இருக்கிறார். அவர் பேசுவதுமில்லை சாப்பிடுவதுமில்லை யாராவது பழமுதலிய வற்றைக் கொடுப்பதற்குக் கொ ண்டுபோனால் வாயைமூடிக்கொள்வர் வஸ்திரந் தரியார் யாராவது தரிப்பித்தால் உடன்பட்டிருப்பார். அது அவி ழ்ந்து விழுந்தால் அதைத் தொடவுமாட்டார்.

இப்படியே யெந்தக்காலமுஞ்சைவசமயத்தில் ஞானிகள் எழும்பிக்கொண்டே வருகிறார்கள்.

கிறிஸ்து சமயத்தார் புத்தகத்தில் எலியா ஏனோ
க்கு மோசே ஆபிரகாம் நோவா இவர்களைப் பெரியதீர்
க்கதரிசியென்றும் ஞானிகளென்றுஞ் சொல்லுகிறது
அது சரிதான் அவர்களெல்லாஞ் சைவசமயிகளே
உவர்நீர்நன்னீ ராக மாறின அற்புதம்.

திருவெண்காட்டில் தஞ்சை நகரத்தரசரும் திரு
வாவடுதுறை யாதீனம் திருச்சிற்றம்பல தேசிகரும் ஏக
காலத்தில் தலதரிசனத்துக்காக வந்திருக்கும்பொழுது,
இருவரும் ஒருவரோடொருவர் கலந்து முறைப்படி
அன்புற்றிருக்குங் காலத்தில் தஞ்சை நகரத்தரசர்
நாற்பது நாள் வரையும் பிராமணபோஜனம் செய்வித்
தார். அதில் அன்றுடகமுண்ண பிராமண போஜன உச்
சிட்டங்களையெல்லாம் சமீபத்திலிருந்த ஒரு கிணற்றிற்
போட்டிருந்தார்கள். நாற்பது நாளுஞ் சென்றபின்பு
அரசர் அதையறிந்து கிணற்றிற் போட்டிருந்த உச்சிட்
டங்களையெல்லாம் வெளியாக்கும்படி உத்தரவு செய்
த பிரகாரம் வெளியாக்கும்பொழுது முழுவதும் புழு
வாயிருந்தன. அந்தச்சமாசாரத்தைஅரசர்திருச்சிற்றம்

பல தேசிகருக்கு அறிவித்தனர். தேசிகர் அரசரை நோக்கி நல்லது இனிமேல் நாற்பது நாள் மகேச்சுர பூசை நடப்பிவியுங்களென்றார். அரசர் அப்படியே நடப்பிவித்தார். அந்த உச்சிட்டங்களையெல்லாம் மடத்துக்குச்சமீபத்தி லிருந்த ஒரு உவர்த்தண்ணீர்க்கிணற்றில் தேசிகர் உத்தரவுப்படி போடப்பட்டிருந்தன. அப்படியே போடப்பட்டு வருவதை அரசரும் பார்வையிட்டுக்கொண்டு வந்தனர். மகேச்சுரபூசை நாற்பது நாளும் நடந்து முடிந்தபின்னர் தேசிகரும், அரசரும் ஒன்றாயிருந்துகொண்டு அந்த உச்சிட்டங்களை வெளியாக்கும்படி உத்தரவு செய்து சோதித்ததில் ஒரு புழுவாவது கிடையாது முன் உவர்த்தண்ணீராயிருந்தது மாறிமதுரமான தண்ணீராயுமிருந்தது. அதுகண்டு அரசர் தேசிகரைமிகவும் கனப்படுத்தி வணங்கினது மன்றி மிகுந்த வரும்படியுள்ள நிலங்களை மானியமாக விட்டனர். அந்த மானியம் இக்காலத்திலும் திருவாவடுதுறைஆதீனத்துக்கு நடந்துகொண்டு வருகின்றது இப்போதும் அந்தக்கிணற்றிற்குப் பரிகலக்கிணறு என்று பெயர்.

6571



ஆணவச்சேற்றில் அழுந்திக்கிடந்து கொண்டு பிறப்பிலும் இறப்பிலும் திரிந்து திரிந்து உழல்கின்ற ஆன்மாக்களைப் பிறவித் துன்பங்க்ளினின்று நீக்கி நீங்காச்சுகயாகிய வீடடைட்யும்படி செயயத்தக்க திருவருளை ஒருகடைக்கண்ணாற் பாலிக்கும் வல்லபத்தினையுடைய இந்தத் தேசிகருக்கு உவர்த்தண்ணீர் மதுரமான தண்ணீராகும்படி செய்தது ஒரு அருமையோ அருமை யன்று. அப்படிப்பிறவித்துன்பம் அறும்படி அருட்பாலிக்கின்ற வல்லபமுடைய ஞானசிரியர்கள் அக்காலத்தில் இருந்தனரோ தவிர இக்காலத்தில உண்டோ. உண்டென்கில் எங்கிருன்றனர். காட்டும். அவரைப் பார்க்கட்டும் என்று மூடர்களாயுள்ளவர்கள் சொல்வார்கள். அறிவாளர் அப்படிச் சொல்லமாட்டார்கள்.

அதன் உண்மை யெப்படி யெனில்.

திருவாவடுதுறை தருமபுர மடாலயங்களிலும் நாடுகளில் திரிகின்ற பரமசாதுக்களா யுள்ளவர்களிலும் இருப்பார்கள்.

அவர்கள் ஞானசிரியர்தானென்பது.

தீரத் துறந்தவர்களாயும் இருவினை யொப்புவந்

வ..னாயு முன்னையர்கள் அறிவார்களே தவிர மற்றைய
ரறியார்கள்.

அப்படி இருவினை யொப்புவந்தவர்கள் தானும்
அறிவதெப்படி யெனில்.

இவன் இருவினை யொப்புவந்த பக்குவன். இவ
னை அடிமையாகக் கொண்டு பிறவிக்கடலினின்று க
ரை யேற்ற வேண்டுமென்று ஆசிரியர் திருவுள்ளத்தில்
இரக்கம் வைத்து அந்த ஆசிரியர் தம்மை ஞானாசிரியர்
தானென்ற குறிப்பை அந்தப்பக்குவன் உணரும்படி
உணர்த்தினாலொழிய அந்தப்பக்குவனும் அறியான்.
இவ்வளவு அருமையாயிருப்பது இக்காலத்தில்
மாத்திரமன்று முந்திய காலத்திலும் அப்படியேதான்.

எப்படி யெனில்.

வாதவூரராகிய மாணிக்கவாசகரென்பவர் தமக்கு
ஞானாசிரியர் எப்பொழுது வருவாரெனக் கண்ணுங்
கண்ணீருமாய்த் தியக்கமுற்றிருந்தனர்.

திருவிளையாடற் புராணம்.

வேத ஆகமச்சென்னியில் விளை பொருள பேதம்
பேதமாகிய பிணக்கறுத் திருட்பிணி யவிழ்த்து.
காதலாகிய தன்னையு மென்னையு நல்கும்.
போதனாகிய குருபரன் வருவதெப்பொழுதால்

என்று தேட்டங்கொண்டு அதிதீவிர பக்குவமுற்றிருந்த அந்த மாணிக்கவாசகரானவர் திருப்பெருந்துறையில் தமக்கு எதிராகப் பரமசிவமே மானிடச்சட்டை சாற்றிககொண்டு ஞானாசிரியாய் வந்திருக்க இவர்தான் ஞானாசிரியனென்பதை யறியாதிருந்த அவருக்கு இந்த ஆசிரியர், தாமேபரமசிவமாகிய ஞானாசிரியனென்னுங் குறிப்பைஉணர்த்தியதின் பேரில் உணர்ந்தார்.

திருவிளையாடற் புராணம்.

மன்றுளாடிய ஆனந்த வடிவமும் வடவால்
ஒன்றி நால்வருக கசைவற வுணர்த்திய வுருவும்
இன்று நாயினேற் கெளிவந்த விவ்வுரு வென்று
அன்றுநாயகன்குறிப்புள துணர்த்திட அறிந்தார்.

என்று சொல்லியிருக்கின்றது.

இப்படிக்கிருக்க ஞானாசிரியனை உலகத்தார் காட்

டக்கூடுமென்றும் காட்டிஞலறிந்துகொள்ள கூடுமென்றும் எண்ணிக்கொள்ளுகிருர்கள்.

சைவசமயத்தில் ஞானப்பேற்றுக்கு இப்படி எவ்வளவு தூரமோ கிருமையாயிருக்கின்றது.

கிறிஸ்து சமயத்தில் எப்படிப்பட்ட அக்கிரமக்காரர்களுக்கும் இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திஞலே யுன்க்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேனென்று சொல்லிக்கொண்டு தண்ணீரைக் கோரித் தலையில் விட்ட வுடனே ஞானப் பேற்றை யடைந்து விட்டோமென்று அடங்காத கருவங் கொள்ளுகிருர்கள்.

அதைப்பற்றி யென்னத்தைச் சொல்லுகிறது.

பேசப்போனல் வாயாலடித்துவிடுகிருர்கள்.

மேலே யடுத்தடுத்துச் சொல்லியபடி சிவஞானப்பேற்றை யடைவது மானிட ஜென்ம மெடுத்ததின் பிரயோஜனமே தவிர வேறு அரசாட்சிமுதலிய எந்தப் பேற்றை யடைந்த போதிலும் அவையெல்லாம் தேகமிருக்கு மட்டே தவிர தேகம் விழுந்தபின் ஆன்மாவாகிய தனக்குப் பிரயோஜனமாகா.

ஆன்ம பிரயோஜனமாகிய சிவ ஞானப் பேற்றை

அடைய விரும்புகிறவர்கள் முதலில் பதி பசு பாசத்தன்மையை யறிந்து கொள்ள வேண்டும்.

அந்த அறிவைப்பற்றி இதனடியிற் சொல்லப்படுகிற சைவசித்தாந்த நவநீதத்தைப் பார்த்தால் அறியலாம்.

சைவசித்தாந்தநவநீதம்.

1. வினா அநாதியிலே ஆன்மாக்கள் எதிற்கிடந்தன.

விடை ஆணவமலத்திற் கிடந்தன.

2. வினா ஆன்மாக்களுக்கு ஆணவமலத்தைக் கொடுத்தது பரமசிவனா.

விடை பரமசிவன் நின்மலனாகிய சர்வானுக்கிரகனாதலால் அவன் கொடுத்ததன்று.

3. வினா ஆணவமலந்தானே வந்துதான் ஆன்மாவைப் பொருந்தியதோ.

விடை ஆணவமலம் சடமாதலால் தானே வந்து பொருந்த மாட்டாது.

4. வினா ஆன்மாக்களே ஆணவமலத்தைப் பிடித்தனவோ.

விடை ஆம்.

5. வினா ஆன்மாக்களுக்கு ஆணவமலம் இயற்கையோ.

விடை இயற்கையானால் பாலுக்கு வெண்மையும் கரிக்குக் கருமையும் ஒருக்காலும் விட்டு நீங்காதது போலிருக்க வேண்டும். அப்படிக்கில்லையாதலால் இயற்கையன்று.

6. வினா ஆணவமலம் ஆன்மாக்களுக்கு இயற்கையில்லையானால் செயற்கையோ.

விடை வெள்ளை வத்திரத்தில் அழுக்கேறுவது போல முத்தி காலத்திலும் ஆன்மாவை ஆணவம் பொருந்தியிருக்கவேண்டும் அப்படிக்கில்லாததால் செயற்கையுமன்று.

7. வினா ஆன்மாக்களுக்கு ஆணவமலம் இயற்கையுமன்று செயற்கையுமன்று ஆனால் எப்படிச்சொல்லபடும்.

விடை நெல்லுக்குமியும் செம்புக்குக் கழிம்பும் க

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWA

டன் நீருக்கு உப்பும்போல ஆன்மாக்களுக்கு ஆணவமல
ம் அநாதி செயற்கையென்றும் அநாதி சையோகமெ
ன்றுஞ் சொல்லப்படும்.

8. வினா ஆன்மாக்கள் சுதந்தரர்களோ சுதந்தரவீன
ர்களோ.

விடை சுதந்தரவீனர்கள்.

9. வினா ஆன்மாக்கள் சுதந்தரவீனர்களா யிருந்
தலால் ஆன்மாக்களுக்கு பரமசிவத்தைப் போலச்
செய்தி யுண்டோ,

விடை ஆன்மாக்களுக்கு வேதாகமங்களிலே விதி
விலக்கும் நரகமும் மோட்சமும் உண்டாயிருத்தலினா
லே அவர்களுக்குச் செய்தி யுண்டு.

10. வினா ஆன்மாக்களுக்கு கன்மத்திலுண்டாகி
ய விருப்பம் பரமசிவம் கொடுத்த விருப்பமோ ஆன்மா
க்களுக்குண்டாகிய விருப்பமோ-

விடை ஆன்மாக்களுக்கே யுண்டாகிய விருப்ப
மாகில் புண்ணியங்களிருக்கப் பாவங்களைச் செய்யார்

கள் ஆதலால் கன்மத்திலுண்டாகிய விருப்பம் ஆன்மாக்களுக்கே உண்டான விருப்பமன்று.

12. வின ஆன்மாக்களுக்கு கன்மத்திலுண்டாகிய விருப்பம் பரமசிவம் கொடுத்தது மன்று. ஆன்மாக்களுக்கு உண்டானதுமன்று ஆனுல் அந்தவிருப்பந்தான் ஆன்மாக்களுக்கு எப்படி யுண்டாயிற்று.

விடை ஆணவமலத்தினுலேயே யுண்டாயிற்று

13. ஆன்மாக்களுக்கு கன்மத்திலே விருப்பதனைக் கொடுத்த ஆணவமலம் ஆன்மாக்களுக்கு கன்மத்தை அறிந்தெடுத்துக் கொடுக்குமா.

விடை கொடுக்கமாட்டாது.

14. வின விரும்பிய ஆன்மாக்கள் கன்மத்தை யறிந்தெடுத்துக்கொண்டு புசிக்குமா.

விடை புசிக்கமாட்டாது.

15. வின விரும்பப்பட்ட கன்மம் ஆன்மாக்களை யறிந்து வந்து பொருந்துமா.

விடை பொருந்தாது.

16. வினு ஆன்மாக்கள் கன்மங்களைப் புசித்தல் ஆன்மாக்களாலும் கன்மங்களாலும் ஆணவத்தாலும கூடாதெனில் யாரால் புசிப்பிப்ப தாகிறது.

விடை கடவுளே யறிந்து இரக்கத்தினாலே அவ்வான்மாக்களுக்கு கன்மத்துக்கேற்ற தனுவைக் கொடுத்து அத்தனுவினிடமாக அக்கன்மத்லைதக் கூட்டிப் புசிப்பர்.

17. வினு எவ்வாறு புசிப்பிப்பர் சொல்லும்.

விடை குழந்தைக்கு பாலின் கண் உண்டாகிய விருப்பம் அறிந்து ஊட்டுகின்ற தாயைப் போலவே

18. வினு குழந்தைக்குப் பாலின் கண்ணுண்டாகிய விருப்பம் தாய் சொடுத்த விருப்பமா.

விடை தாய் கொடுத்த விருப்பமானால் அவன் கொடுக்கின்ற போதெல்லாம் பாலையருந்தல் வேண்டும் அப்படிக்கில்லாததால் அந்த விருப்பந் தாய் கொடுத்த விருப்பமன்று.

19. வினு. தாய் கொடுத்த விருபப மில்லையானல் குழக்தைக் குண்டாகிய விருப்பமா.

விடை குழந்தைக்குண்டாகிய விருப்பமானால் மா ந்தங்கொண்ட வேளையிலும் மாறுதருந்தல் வேண்டும் அப்படிக்கில்லாததால் குழந்தை கொண்ட விருப்பம ன்று.

20. வினா பாலின் கண்ணுண்டாகிய விருப்பம் தாய் கொடுத்த விருப்பமுமல்ல குழந்தைக்குண்டாகிய விருப்பமுமல்ல ஆனால் அந்த விருப்பம் எப்படி உண் டாயிற்று.

விடை பசியே குழந்தைக்குப் பாலின்கண் விரு ப்பத்தைக் கொடுத்தது.

21. வினா விருப்பத்தைக கொடுத்த பசி பாலை யறி ந்தெடுத்துக் கொடுக்குமா.

விடை கொடுக்கமாட்டாது.

22. வினா விரும்பிய குழந்தைதான் பாலையறிந்தெ டுத்துக்குடிக்குமா.

விடை குடிக்கமாட்டாது.

23. வினா விரும்பப்பட்ட பால் தான் குழந்தை வாயில் வந்து புகுதுமா.

விடை புகுதமாட்டாது.

24. வினா குழந்தை பால் குடிக்குந்தொழிலானது பசியினாலும் குழந்தையினாலும் கூடாதாகில் யாராற் கூட்டுவிப்பதாயிருக்கின்றது.

விடை தாயானவள் அறிந்து இரக்கத்தினாலே பாலை யெடுத்துப் பாலடையில் விட்டுக் குழந்தை வாயிலே புகட்டுவள்.

25. வினா பரமசிவம் ஆன்மாக்களுக்குக் கன்மத்தை யூட்டுவதும் தாய் குழந்தைக்குப் பாலூட்டுவதும் சரியென்று சொன்னீர். ஆனால் தனித்தனி ஒன்றுக்கொன்று உவமையாவதை யெடுத்துச் சொல்லுமய்யா

விடை குழந்தையைப்போலும் ஆன்மா பசியைப் போலும் ஆணவமலம் பாலைப்போலுங் கன்மமலம் தாயைப்போலும் பரமசிவம் பாலடையைப் போலுங் ஞு.

26. வினா பரமசிவம் ஆன்மாக்களுக்குக் கன்மத்தை யூட்டுவதைத் தாயானவள் குழந்தைக்குப் பாலூட்டுவது போலாமென்று உவமை கூறினீர் அதை யறிந்தேன் இன்னம் ஒரு உவமை கூறும்.

விடை நல்லது அப்படியாகட்டும்.

27. வினா பரமசிவம் ஆன்மாக்களுக்குக் கன்மத்தை யூட்டுவதைத்தப்பற்றிக் குருடன் கோல் வழிச் செல்வதை யுவமை சொல்லக் கூடுமோ.

விடை கூடும்.

28. வினா குருடனுக்கு கோலின்கணுண்டாகிய இச்சை கோல் கொடுத்திருக்கிறவ னிச்சையோ.

விடை கோல கொடுத்திருக்கிறவ னிச்சையானால் அவன் கொடுக்கின்ற நேரமெல்லாங் கோலைப்பிடித்தல் வேண்டும் அப்படிக்கில்லாததால் கோல் கொடுத்திருக்கின்றவ னிச்சையன்று.

29. வினா குருடனுக்குண்டாகிய இச்சையோ.

விடை குருடனுக்குண்டாகிய இச்சையானால் எப்போதுங் கோலைப் பிடித்துக்கொண்டிருத்தல் வேண்டும்.

30. வினா கோல் கொடுத்திருப்பவ னிச்சையு மன்று, குருடனுக் குண்டாகிய இச்சையுமன்று ஆனால் இந்த இச்சையைக் கொடுத்தது யார்.

விடை குருடே குருடனுக்குக் கோலின்கணிச்சையைக் கொடுத்தது.

31. விடை இச்சையைக் கொடுத்த குருடு கோலை யறிந்தெடுத்துக் கொடுக்குமா.

விடை கொடுக்கமாட்டாது.

32. வினா இச்சித்த குருடனும் கோலை யறிந்தெடுத்துக் கொள்வானா.

விடை அறிந்தெடுத்துக் கொள்ளமாட்டான்.

33. வினா இச்சிக்கப்பட்ட கோல் குருடன் கையில் வந்து பொருந்துமா.

விடை பொருந்தாது.

34. வினா குருட்டினாலுங் கூடாது குருடனாலுங் கூடாது கோலினாலுங் கூடாது அப்படியானால் யாரால் கூடும்.

விடை இந்தச் செய்தியை அவனுக்கு உரிமையுள்ளவன் அறிந்து இரக்கத்தினாலே கோலையெடுத்து அவன் கையில் தந்து அவன் நினைத்த இடத்தில் கொண்டுபோய் விடுவன்.

35. வினு முன் பாலூட்டுவதைப் பற்றித் தனித் தனி ஒவ்வொன்றுக்கும் உவமை யெடுத்துக் கூறியது போல இதற்குந் தனித்தனி ஒன்றுக் கொன்று உவமையாவதை யெடுத்துக் காட்டுமய்யா.

விடை குருடனைப் போலும் ஆன்மா கோலைப்போலுஞ் சரீரம் கோல் சொடுத்திழுக்கின்றவனைப் போலும் கடவுள். இடத்தைப் போலும் புவனம்.

36. வினு ஆணவமலம் சடமாயிருத்தலால் அதற்குச செய்தியுண்டோ.

விடை விஷம் பாஷாணம் தீ நீர் காற்று முதலிய சடங்கட்குச் செய்தி யுண்டாகுற் போல அதற்குமுண்டு.

37. வினு பரமசிவம் ஆன்மாக்களுக்குத் தனுகரணங்களைப்படைக்கு மிடத்துப் பரமசிவத்தின் நினைப்பின்படி படைக்குமோ.

விடை ஒரே வடிவன்றிப் பலவடிவங்களாகப் படைத்தலால் ஆன்மாக்கள் நினைவின்படிதான்.

38. வினு அஃதெவ்வாறு படைப்பர்.

விடை குலாலன் பாண்டங்களை வனையு மிடத்து த் தனது நினைவின்படி வனையாமற் பிறர் நினைவின்படி வனைவான் போலும்.

39. வினு பிறர் நினைவின்படி வனைவானென்று எதிஞல் தோன்றுகிறது.

விடை குயவன் தனது நினைவின்படி வனைவாஞ கில் ஒரே வடிவமாக வனைதல் வேண்டும் அவ்வாறின் றி பலவடிவங்களாய் வனைதலால் அப்பாண்டங்களைக் கொள்ளும் பிறர் நினைவின்படி யென்றுதான் தீர்மானி த்தல் வேண்டும்.

40. வினு பரமசிவன் படைத்தலும் குயவன் வனை தலும் சரிதான் என்பதைப்பற்றி விளங்கும்படி ஒவ் வொன்றுக்குந் தனித்தனி உவமை கூறுமய்யா.

விடை குயவனைப் போலுங் கடவுள் மண்ணைப் போலும் மாயை பாண்டத்தைப் போலுந் தனு. பிற ரைப் போலும் ஆன்மாக்கள் ஆம் என்பதே.

41. வினு ஆன்மாக்கள் எங்கும் வியாபகராக விரு க்க எவ்வாறு சரீரத்தைப் பற்றுவர்.

விடை படிக மலையானது எந்தப்புறத்தில் வன்ன த்தைக் கொடுத்தாலும் பற்றிக் கொள்வது போல எல் லாப் புவனங்களிலும் வியாபகராக விருக்கின்ற ஆன்மா கள் கடவுள் எந்தப் புவனத்திலே சரீரத்தைக் கொடு த்தாலும் பற்றிக் கொள்வர்.

42. வினா அஃதெவ்வாறு பற்றிக் கொள்வர் விள ங்கும்படி சொல்லவேண்டும்.

விடை படிகமலை யொன்று படிகமலைக்கு ஒளி யொன்று படிக வொளிக்குப்பற்றுங் குணம் ஒன்று படிக ஒளிக்குப் பற்றுந் தொழிலொறு வன்னம் ஒன்று வன்னத்தைப்பற்றுவிக்கிறவனொன்று ஆக ஆறு.

43. வினா நீர் சொன்ன ஆறுக்கும் தனித்தனி உவமை கூறுமய்யா.

விடை 1. படிக மலையைப்போலும் ஆன்மா.

2. படிக மலைக்கு ஒளிபோலும் ஆன்ம போதம்

3. படிக ஒளிக்குப் பற்றுங்குணம் போலும் ஆன்ம போதத்திற்கு அறியுங் குணம்.

4 படிக ஒளிக்குப் பற்றுந் தொழிலைப்போலும் ஆன்ம போதத்திற்கு அறியுந் தொழில்.

5. வன்னத்தைப் போலும் மாயாகருவி.

6. வன்னத்தைப் பற்றுவிக்கின்றவனைப் போலும் பரமசிவமென்பதே.

44. வினா ஆன்மாக்களுக்கு அறியுங் குணமிருந்தவினாலே அவர்களை மலம் எவ்வாறு மறைக்கும்.

விடை சந்திராதித்தர்களை இராகு கேதுக்கள் மறைப்பது போலும் நெருப்பை நீர் மறைப்பது போலும் ஆகாயத்தை மலை மறைப்பது போலும் ஆன்மாக்களை ஆணவ விருள் மறைக்கும்.

45. வினா இம்மறைப்புத்தான் ஆன்மாக்களுக்கு வருவது எதினால்.

விடை அவர்கள் கன்மத்தால் வந்தது.

46. வினா ஆன்மாக்கள் அவயவமின்றி நிரவயவராயிருக்க அக்கன்மந்தான் எவ்வாறு வந்தது.

விடை நாம நிரவயவரென்பதை மறந்து அவயவர்தாமென்னும் கருத்தால் அக்கன்மம் வந்தது.

4[?] வினா அக்கன்மத்தால் உண்டாயது எது.

விடை மாயை.

4[?] வினா அம்மாயையால் எவை யுண்டாயின.

விடை தனு கரண புவன போகங்கள்.

49. வினா பரமசிவன் ஆன்மாக்களுக்கு அக்கன்ம பலனைப் புசிப்பிக்கு மிடத்து எவ்வண்ணமாயிருந்து புசிப்பிப்பன்.

விடை பரமசிவன் இச்சா ஞானக்கிரியா சொரூபமாயிருந்து புசிப்பிப்பன்.

50. வினா அஃதெவ்வாறு விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும் முதலாவது இச்சை வடிவ மாவது எப்படி.

விடை ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்க வேண்டு மெனபதே யிச்சை.

51. ஞான வடிவ மெப்படி.

விடை ஆன்மாக்கள் இச்சித்த கன்மங்களையறிவதே ஞானம்.

52. வினா கிரியை எப்படி.

விடை ஆன்மாக்களுக்கு அக்கன்மங்களை யூட்டி யுறக்கித தொலைப் பித்தலே கிரியை.

53. ஆன்மாக்கள் அககன்மங்களையறிந்து புசிக்கு மிடத்து எவ்வாறிருந்து புசிப்பிப்பர்.

விடை இச்சா ஞானக்கிரியாசொரூபராயிருந்து புசிப்பிப்பர்.

54. அஃதெவ்வாறு புசிப்பர் விவரமாகச் சொல்லு மய்யா.

விடை ஒவ் வொன்றாகக் கேள்.

55. வினா இச்சா சொரூப மெப்படி.

விடை பண்ட பதார்த்தங்களிற் சென்று பற்றுதலே யிச்சை.

56. வினா ஞான சொரூப மெப்படி.

விடை அந்தப் பதார்த்தங்களைப் பகுத்தறாய்தலாலே ஞானம்.

57. வினா கிரியா சொரூப மெப்படி.

விடை சர்வத்தையுந் தனதென்றழுந்துதலே கிரியை.

58. வினா ஆத்மாக்களுடைய கன்மம் எத்தனை வகை.

விடை தூலகன்மம் 1, சூக்ஷ்மகன்மம் 2. அதி சூக்ஷ்ம கன்மம் 3.

59. தூல கன்மமென்பது எப்படிப்பட்டது.

விடை வினைகளுக் கெல்லாந் தூல கன்மமென்று பெயர்.

60. வினா சூக்ஷ்மகன்மமென்பதுஎபபடிப்பட்டது

விடை தூலத்தாற் செய்த வினைகளுக்குப் பின் பலனாக வருகின்ற புண்ணிய பாவங்கட் கெல்லாம் சூக்ஷ்ம கன்ம மென்று பெயர்.

61. வினா அதி சூக்ஷ்ம கன்மமென்பது எப்படிப் பட்டது.

விடை மேற் சொல்லிய புண்ணிய பாவங்கட்குப்

பின்பலனாக வருகின்ற இன்பதுன்பங்களுக்கு அதிசூக்ஷ்ம கன்மமென்று பெயர்.

62. வினா இம்மூவகையான கன்மங்களும் வேறு எவ்வகையான பெயர் பெற்று வழங்கப்படும்.

விடை ஆகாமியம் சஞ்சிதம் பிராரத்துவமென மூவகையாய் வழங்கப்படும்.

63. வினா அவ்வினைகள் ஒவ்வொன்றும் வழங்குவதை விவரித்துச் சொல்லுமய்யா.

விடை 1. இருவினைகளுக்கு ஆகாமிய மென்று பெயர்.

2. இருவினைப் பயனாகிய புண்ணிய பாவங்கட்குச் சஞ்சித மென்று பெயர்.

3. புண்ணிய பாவங்கட்குப் பின்பலனாக வருகின்ற இன்ப துன்பங்களுக்குப் பிராரத்துவமென்று பெயர்.

64. வினா இவை ஒவ்வொன்றுக்கும் உவமையெடுத்து விளங்கும்படி சொல்லுமய்யா'

விடை 1 பயிரிடுவதுபோலும் இருவினைகள்.

2 பின்பு அப்பயிராலுண்டான பலனைக்க ளஞ்சியத்தில் கட்டிவைப்பது போலும் புண்ணிய பாவங்கள்.

3 அப்படிக் கட்டிவைத்ததிற் சிறுகச்சிறு க எடுத்துண்பது போலும் இன்ப துன்பங்களையனுபவி த்தல்.

65 வினா இக்கன்மங்கள் ஆன்மாக்கள் நினைத்தப் டியே கிரமமாய்ப் பலன் பட்டுவருவதுண்டோ.

விடை ஒருவன் முன்னே பனையுண்டாக்கிப்பின் பு கத்திரி நட்டு அதன் பின்பு கீரை பயிரிட்டால் கீ ரை பதினைந்து நாளுக்குள் புசிப்பாம்.

இரண்டாவது பயிரிட்ட கத்திரி இரண்டு மாதத் திற்குட் புசிப்பாம்.

முதலாவது பயிரிட்டபனை பதினைந்து வருடத் திற் பக்குவப்பட்டு வரும்

அதுபோல ஆன்மாக்களுக்கு முன்பு செய்தது முன்னேவராமல் வெகு ஜெனனத்துக்குப்பின்பு வருத லும் பின்பு செய்தது உடனே வருதலுமாம்.

66 வினா இந்தக்கன்மங்கள் ஆன்மாகளுக்குப் புசிப்பாக வருங்காலத்து எவ்வாறு வரும்.

விடை ஆதிதெய்வீகம் ஆதிபௌதீகம் ஆதிஆத்மீகம் என மூன்று விதமான தாபத்திரியங்களால் வரும்.

67 வினா ஆதி தெய்வீகமென்பது எப்படிப்பட்டது.

விடை தெய்வததால் வருகின்ற இன்ப துன்பங்களே

68 வினா பௌதீகமென்பது எப்படிப் பட்டது.

விடை பூதத்தால்வருகின்ற இன்பதுன்பங்களே.

69 வினா ஆத்மீகமென்பது எப்படிப்பட்டது.

விடை ஆன்மாக்களால் வருகின்ற இன்ப துன்பங்களே.

70 வினா மேற்கூறிய கன்மங்கள் எவ்வாறொழியும்

விடை ஒருவன் பயிரிட்டு ஆயிரங்கோட்டை நெல்லுக் கண்ட பின்பு களஞ்சியத்திலே ஐந்நூறுகோட்

டை நெல்லைக் கட்டி முந்நூறு கோட்டை நெலலை உணவுக்காக வைத்து இருநூறு கோட்டை வயலில் விதைத்திருக்கக களஞ்சியத்திற்கட்டிய நெல் தீப்பட்டு வெந்தது

உண்ணவைத்த நெல் உண்டு செலவழிந்தது

விதைத்த நெல் மழையின்றிக் காய்ந்தது

இதுபோலவே ஆன்மாக்களுக்குப் பககுவம் வந்த காலத்தில் ஒழியும.

71 வினு ஆன்மாக்களுக்குப் பக்குவம் வருதலென்பது எப்படி.

விடை உண்மை ஞானம் பிறததலே பக்குவம்.

72. வினு பககுவம வந்த காலத்தில் கன்மங்கள் ஒழியும் விதத்தைச்சொல்லும்.

விடை அய்யா ஒவ்வொன்றைப்பற்றிக் கேட்டால் சொல்லுகிறேன.

73 வினு களஞ்சியத்திற் கட்டியிருக்கிற நெல்லுக் கொப்பான சஞ்சிதமானது எப்படித்தொலையும்.

விடை ஞானாசிரியருடைய திருவருள் நோக்கால் வெந்து போய்விடும்.

74 வினா உணவுக்காக வைத்த நெல்லுக் கொப்பான பிராரத்துவ கன்மம் எப்படித் தொலையும்.

விடை எடுத்த சரீரத்துக்குப்புசிப்பாகித் தொலையும்.

75 வினா வயலில் விதைத்த நெல்லுக் கொப்பான ஆகாமியகன்மம் எப்படித்தொலையும்.

விடை பரமசிவத்தினது நின்மலஞானத்தால் மேலுக்கு வராமல் நீங்கிப் போய்விடும்

76 வினா இவ்விதமாய் ஆன்மாக்களுக்குக் கன்மங்களைப் புசிப்பிப்பவனுந் தொலைப்பிப்பவனும் பரமசிவனாயிருக்க ஆன்மாக்கள் கன்மங்களுக்கு முதன்மையென்பதாக எப்படிக் கற்பிக்கப்படும்.

விடை ஆன்மாக்களுக்குக் கன்மத்தின் கண் விருப்பமாயிருக்கப் பரமசிவம் சுவர்க்கத்திற்கு வா வென்றழைத்தால் வரமாட்டான் ஆதலால் ஆன்மாக்கள்

பெத்தகாலத்தில் ஆணவமலத்தில் அழுந்திக் கிடக்கும் பொழுது தாம் சற்றும் தோன்றாமல் அதன் மயமாயிருப்பதால் பெத்தகாலத்தில் ஆன்மாக்களே முதன்மையெனவேண்டும்.

77 வினா ஆன்மாக்கள் முத்திகாலத்தில் முதன்மையாகாரோ.

விடை ஆன்மாக்கள் பெத்தகாலத்தில் ஆணவத்தில் அழுந்திக் கிடப்பதுபோல முத்திகாலத்தில் பரமசிவத்திலழுந்திக் கிடப்பர் ஆதலால் முத்திகாலத்தில் பரமசிவமே முதன்மையாம்.

78 வினா பெத்தான்மாக்களிடத்திலும முத்தான்மாக்களிடத்திலும் பரமசிவம் எப்படியிருக்கும்.

விடை பெத்தான்மாக்களிடத்தில் பாலுக்குள் நெய் போலவும் முத்தான்மாக்களிடத்தில் தயிருள் வெண்ணெய் போலவுமிருக்கும்.

79 வினா ஆன்மாக்கள் எக்காலத்தினுந் தனித்திருக்கின்றதில்லையோ.

விடை கண்ணானது ஒருக்கால ஒளியோடும் ஒரு

க்கால் இருளோடுங்கூடியிருப்பதன்றி ஏககாலத்திலுந் தனித்திராததுபோல ஆன்மாக்களெல்லாம் ஒருக்கால் மலத்திலேயும் ஒருக்கால பரமசிவத்திலேயுங் கூடியிருப்பதன்றி எக்காலத்திலுந்தனித்திரார்கள்.

80 வினா ஒளியும் இருளும் ஓரிடத்திற் கூடியிராததுபோல அவ்வான்மாக்களிடத்தில் ஆணவமலமும பரமசிவமும் ஓரிடத்திற்கூடியிராதல்லவா.

விடை ஒருமரத்தில் அடிதொட்டு நுனிபரியந்தம இரதமும் அக்கினியுங்கூடியிருத்தல் போல பரமசிவமும் அவ்வான்மாக்களைக் கூடியிருக்கும்.

81 வினா ஆன்மாக்கள் நரகத்திற் கிடந்து துன்பங்களை யனுபவிக்குமிடத்து அவர்களைவிட்டு நீங்காத பரமசிவத்துக்குத் துன்பம் உண்டோ.

விடை ஆதித்தனொளிபடிக ஒளியிற் கலந்து நின்று வன்னங்களைப்பற்றுவித்துந்தான் பற்றாதவாறு போலவும்

ஒருவன் அநுபவிக்கின்ற துன்பம் அவன் வயிற்

திற் கிடக்குங்கிருமிகட் கில்லாதது போலவும் பரமசி வத்துக் கொருககாலுமில்லை.

82 வினா ஆன்மாக்கள் எக்காலத்திலும் ஒன்றோ டு கலந்திருத்தலால் அவர்களுக்கு அவத்தையேதேனு ண்டோ.

விடை கேவலம் சகலம் சுத்தம் எனமூன்று அவ த்தையுண்டு.

83 வினா இம்மூன்றும் எத்தனை வகைப்படும்.

விடை காரணம் காரியம் என இருவகைப்படும்.

84 வினா காரண கேவலமாவதென்ன.

விடை அநாதியிலே ஆன்மாக்கள் அறிவுகெடா மல் ஆணவமலத்தில் அழுந்திக்கிடத்தல்.

85 வினா அது எவ்வாறு அழுந்திக்கிடந்தது.

விடை கண்ணானது இராக்காலத்திருளிலே ஒளி கெடாமல் விழித்திருத்தல்போலும்.

86 வினா காரியகேவலமாவதென்ன.

MAHAMAHOPADHY
Dr. U. V. SWAMINATHA


விடை நெற்றி கண்டம் இதயம் நாபி மூலம் என்னும் இவ்வைந்திடத்தினும் சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்னும் கீழாலவத்தை ஐந்தையும் அடைதல்.

87 வினா காரணசகலமாவதென்ன.

விடை அநாதிகேவலத்திலே யழுந்திக் கிடந்த ஆன்மாக்கள் மாயாகருவிகளினாலேஅக்கேவலம் நீங்கிச் சுகதுக்கங்களையறிதலாம்.

88 அஃதெவ்வாறறியும் விளங்கும்படி சொல்.

விடை இராக்காலத்திருளிலே யழுந்திக்கிடந்த கண்ணானது விளக்கினாலே இருணீங்கிப் பதார்த்தங்களைக் காண்பது போலேயாம்.

89 வினா காரிய சகலமாவதென்ன.

விடை இலாடத்தானத்திற்றானே துரியாதீதமுதல் சாக்கிரமீறாயுள்ள மத்தியாலவத்தை ஐந்தையும் அடைதலாம்.

90 வினா காரண சுத்தமாவதென்ன.

விடை அநாதி கேவலத்திலும் சகலத்திலும் அழுந்திக்கிடந்த ஆன்மாக்கள் அருட்டெரிசனத்தினால் அவைகளை விட்டு நீங்கிப்பரமானந்தத்தை யனுபவித்தல்.

91 வினா அஃதெவ்வாறு விளக்கச் சொல்.

விடை இராக்காலத்திருளோடும் விளக்கோடுங்கூடியிருந்த கண்ணானது ஆதித்தனுதயஞ் செய்த விடத்து அவைகளை விட்டு நீங்கி அவ்வாதித்தனைக் கண்டு கொண்டிருத்தல்போலும்.

92 வினா காரியசுத்தமாவதென்ன.

விடை நின்மல சாக்கிரமுதல் நின்மலதுரியாதீதமிறுயுள்ள மேலாலவத்தைஐந்தையுமடைதலே.

93 வினா பரமசிவம் செய்கின்ற பஞ்சகிருத்தியங்கள் ஆன்மாக்களுக்கோ சரீரங்களுக்கோ.

விடை ஆன்மாக்கள் நித்தியராதலால் சிருட்டி திதி சங்காரம் கூடாது. சரீரம் சடமாதலாலதிரோபவமும் அநுக்கிரகமும் கூடாது. அச்சரீரங்கள் முத்தொ

யிற்படுமிடத்து அதில்ஆன்மாக்கள் அழுந்துவதினாலும் ஆன்மாக்களினுடைய திரோபவ அனுக்கிரகம்என்னும் இரண்டுதொழிலும் சரீரங்கட்கிலலாமையாலும் பஞ்சகிருத்தியங்களும் ஆன்மாக்களுக்கேயாம்

94. வினா பரமசிவம் பஞ்சகிருத்தியத்தை ஆன்மாக்களிடத்தில் நடத்துவது எவ்வாறு.

விடை ஆன்மாக்களுக்கு மாயாகருவிகளைப் படைத்து அறிவையுண்டாக்குவதே சிருட்டி.

2 ஆன்மாக்களுக்கு மாயாகருவிகளைநிறுத்தி அறிவைநிலைபெறச்செய்வதேதிதி.

3 ஆன்மாக்களுக்கு மாயாகருவிகளை ஒடுக்கி அறிவைப்போக்குவதே சங்காரம்.

4 ஆன்மாக்களுக்கு அறியும்தொழில்களை அருளைக்கொண்டு மலசத்திகளால் மறைப்பித்துஅவ்வவர்கள் கன்மங்களைத் தக்கபடிநிறுத்தலே திரோபவம்.

5 ஆன்மாக்களுக்கு இன்பதுன்பங்களைப் புசிப்பித்துப்புண்ணிய பாவங்களாகிய வினைகளையறுத்தலே அநுக்கிரகம்

94. ஆன்மாக்கள் அப்பஞ்சகிருத்தியப் படுதலில்

சிருட்டியாவது எவ்வாறு.

விடை அவர்கள் அறியுந்தொழிலேசிருட்டி.

95. வினா திதியாவது எப்படி.

விடை அவர்கள் அறியும் தொழிலில் நிலைநிற்றலேதிதி.

96. வினா சங்காரமாவதெப்படி.

விடை ஆன்மாக்கள் அறியுந்தொழில் நீங்கலே சங்காரம்.

97. வினா திரோபவமாவதெப்படி.

விடை ஆன்மாக்களுக்கு அறியுந்தொழில் நீக்குமிடத்துள்ள அறியாமையே திரோபவம்.

98. வினா அநுக்கிரகமாவதெப்படி.

விடை ஆன்மாக்கள் இன்பதுன்பங்களைப் புசித்துப் புண்ணியபாவங்களைக்கழித்தலே அநுக்கிரகம்.

99 வினா பரமசிவனது பஞ்சகிருத்தியமும் அவற்றில் ஆன்மாக்கள் படுதலும் இவ்வாறாயிருக்க, அவர்கள் பி

றந்தார் இறந்தார் நரகமுற்றார் மோக்ஷமடைந்தார் என்று வேதாகமங்களிற் கூறுகின்றதெவ்வாறு.

விடை. ஆன்மாக்கள் மாயாகருவிகளைப் பற்றியிருந்திருத்தலே பிறப்பு, அம்மாயாகருவிகளை நீங்கியறியாதிருத்தலே இறப்பு, ஆயாசமுற்றிருத்தலே நரகம் அநாயாசமுற்றிருத்தலே மோக்ஷம் என அறிக.

100. ஆன்மாக்கள் மோக்ஷமடையுமிடத்துக் கெட்டு கூடுவரோ கெடாதுகூடுவரோ.

விடை. கெட்டால் கூடத்தக்கதேயில்லை. கெடாதிருந்தால் கூடவேமாட்டார்கள். ஆதலால் ஆன்மா கெடாமல் விடயத்திற்செல்லும் அவ்வான்மபோதம் நிகழ்ச்சிகெட்டுக் கூடுமென்று அறிக.

101. வினா அந்த ஆன்மாக்கள் அனந்தாயிருப்பதால் அவர்களுக்குள் பேதமுண்டோ.

விடை. விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர் எனமூன்று பேதங்களுண்டு.

102. வினா அவர்களுக்குள் விஞ்ஞானகலர் எப்படிப்பட்டவர்கள்.

விடை ஆணவமலம் ஒன்றுடன் மாத்திரங்கூடியி ருக்கிற ஆன்மாக்களே விஞ்ஞானகலர்.

103. பிரளயாகலர் எப்படிப்பட்டவர்கள்.

விடை ஆணவமலம் கன்மமலம் என்னும் இவ் விரண்டோடு கூடியிருக்கின்ற ஆன்மாககளே பிரளயா கலர்.

104. வினா சகலர் எப்படிப்பட்டவர்கள்.

விடை. ஆணவமலம் கன்மமலம் மாயாமலம் என் னும் இம்மூன்றனோடும் கூடியிருககின்ற ஆன்மாகக ளேசகலர்.

105 வினா இந்த மூன்றுவகை ஆன்மாக்களில் பர மசிவம் விஞ்ஞானகலரை யாட்கொள்வதெப்படி.

விடை ஒளியுருவாய்வந்து ஆட்கொள்ளும்.

106. வினா அநாதியிலே ஆன்மாக்களெல்லாம் பரமசிவத்தினால் கன்மமலத்தையும் மாயாமலத்தையும் பெறுதற்குமுந்தி ஆணவமலம் ஒன்றுடன் மாத்திரந் தானேகூடியிருந்தார்கள் ஆதலால் அநாதியிலேதானே

விஞ்ஞானகலராகமாட்டார்களோ.

விடை ஆகமாட்டார்கள் எப்படியெனில் கன்மமலம் மாயாமலம்இரண்டையும் பரமசிவம் கொடுப்பதற்குமுன் ஆன்மாக்கள் ஆணவமலமாகிய இருளில்மூழ்கிக் கிடந்தார்கள் அந்தஇருள் அறும்படிக்கே பரமசிவம் மற்றஇரண்டுமலங்களையும் கொடுத்துப்பஞ்சகிருத்தியப்படுத்தி வருவதினால் வரவரஜெனனந்தோறும் செய்துவருகிறசிவபுண்ணியங்கள் திரளத்திரள முதலில் மாயாமலங் கொஞ்சங் கொஞ்சமாயற்று வரவர மற்ற இரண்டுமலமுங்குறைந்து குறைந்துவரும் அப்பால் அவைகளில்மாயாமலம் நிரம்பவுங்குறைந்து அற்பமாயிருக்கும் பொழுதுதான் சகலரென்னப்படுவார்கள் அவர்களைத்தான் பரமசிவம் மானிடச்சட்டைசாத்திக் கொண்டுவந்துஆட்கொள்ளும்.

107. வினா பிரளயாகலரையாட்கொள்வதெப்படி

விடை தேவஉருவாய்வந்து ஆட்கொள்ளும்.

108. வினா சகலரைஆட்கொள்வதெப்படி.

விடை மனிதஉருவாய்வந்துஆட்கொள்ளும்.

109. வின ஆணவமலம் ஒன்றுடன்மாத்திரங்கூடி விஞ்ஞானகலராயிருந்தவர்யார் அவரைப் பரமசிவம்ஒளியுருவாய்வந்து ஆட்கொண்டதெப்படி.

விடை ஞானசம்பந்தர் என்பவர் நல்லூரென்னும் சிவதலத்தில்தமது பிதாவின் உத்தரவுக்காக ஒருகன்னிகையை மணஞ்செய்த மணக்கோலத்துடன் அந்தமணவாட்டியாரையுங்கையிற்பிடித்துக் கொண்டு சிவபெருமான் ஆலயத்துக்குட்போகும் பொழுது அவரோடுசென்றதிருக்கூட்டத்தார் எல்லாரையுந்தமக்கு முன்னே போகும்படிசெய்தார் அந்தப்படிஆலயத்துக்குட்சென்றகூட்டத்தாரெல்லாரையும் அருட் பிரகாசம்வந்து மூடிக்கொள்ளஅந்தச்சமயத்தில் ஒருதூரஸ்திரியானவள்வந்து நான் தூரமாயிருக்கிறேனே கோவிலுக்குட் பிரவேசிக்கக்கூடாதே என்னசெய்வேனென்று பரிதபிக்கவே அந்தத் தூரஸ்திரியை நோக்கிநீயும் பிரவேசிக்கலாம் பெருநெருப்புக்கு ஈரமில்லையென்று சொல்லவே அவளும் அந்தஆலயத்துக்குள் அருட்பிரகாசத்திற் பிரவேசித்தனள் கடைசியில் அவரும்அவர்கையிற் பிடித்திருந்த மணவாட்டியாரும் அந்தஒளியிற் பிரவேசிக்கவே யாவரும்ஒளியிற்கலந்து ஐக்கியமானார்கள் இந்தஞான

சம்பந்தர்என்பவர்விஞ் ஞானகலர்.

110. வினா இந்தஞானசம்பந்தர் என்பவர் குழந்தையாயிருக்குங்காலத்தில் பரமசிவம்வந்து ஆட்கொள்ளவில்லையோ.

விடை அந்தப்பருவத்தில் பிரளயாகலராயிருந்தார் அக்காலத்தில் இடபவாகனத்தின் மீதுமான் மழுசதுாப்புஜத்துடனே யெழுந்தருளிவந்து ஆட்கொண்டது இந்தப்படிஞானசம்பந்தர்என்பவர் ஒருசெனனத்தில்பிரளயாகலர் விஞ்ஞானகலர் என்னும் இரண்டுபருவத்திலுமிருந்து பரமசிவத்தினால் ஆட்கொள்ளப்பட்டார்.

111. வினா ஒருஜெனனத்தில் சகலர்-பிரளயாகலர் விஞ்ஞானகலர் இந்த மூன்று பருவத்திலுமிருந்து பரமசிவத்தினால் ஆட்கொள்ளப்பட்டவர்களுண்டோ.

விடை உண்டு. மாணிக்கவாசகர் முதலில் சகலராயிருந்து சாஸ்த்திரங்களை யெல்லாம் ஆராய்ந்து ஞானகிரியர் எப்போது வருவரென்று தேட்டமுற்றிருக்குங்காலத்தில் பரமசிவம் திருப்பெருந்துறையில் மாணிடச்சட்டை சாத்திக்கொண்டு வந்து அவரை ஆட்கொண்டது.

அதன்பின்பு பிரளயாகலரானதினால் சிலவேளைக ளில் தேவருபமாய்வந்து காட்சிகொடுத்திருக்கிறது அதன்பின்பு விஞ்ஞானகலரானதினால் கடைசியி ல் சிதம்பரத்தில் சிதாகாயத்திற் சேர்த்துக்கொண்டது

112. வி: முன் விஞ்ஞானகலராயிருந்த ஞானச ம்பந்தரை ஒளியுருவாய்வந்து பரமசிவம் ஆட்கொண்ட தென்று சொல்லியிருப்பதினாலும் பின்பு மாணிக்கவாச கரை அப்படிக்கில்லாமல் சிதாகாயத்திற் சேர்த்துக்கொ ள்ளப்பட்டதென்று சொல்லியிருப்பதினாலும் பேதமாக த்தோன்றுகிறதே அதெப்படி

விடை மாணிக்கவாசகரையும் சாஸ்திரஞ் சொல் லுகிறபடி ஒளியுருவாகவேவந்து ஆட்கொண்டிருக்கும். அந்தத் தோற்றம் மாணிக்கவாசகர் ஒருவரைத்தவிர அ வரோடிருந்த மற்றவர்களுக்குத் தோன்றியிருக்கலாம் என்னில் பரமசிவத்தின் வல்லபத்திற்கு அளவில்லை.

113. வி: ஒரு ஜெனனத்தில் விஞ்ஞானகலராக மாத்திரமிருந்து சிவத்திற்கலந்தவர்களில் ஒருவரைக்கு றித்துச் சொல்லுமய்யா

விடை காசிதேசத்து அரசன் புத்திரியாகப்பிறந்திருந்த நாயடியாள் என்பவரே

114. வினா ஒருஜென்மத்திற் பிரளயாகலராக மாத்திரமிருந்தவர் யார் அவரைப்பரமசிவம் தேவ உருவாய்வந்து ஆட்கொண்டதைப்பற்றிச் சொல்லுமையா

விடை காடுவெட்டிய சோழர் என்பவரை ஆட்கொண்டதைப்பற்றித்திருவிளையாடற்புராணம் விடை இலச்சினை இட்ட படலத்தால் விவரமாய் அறியலாம்.

அந்தப்படலத்தில்

வெம்மைசெய் கதிர்கால் செம்பொன்
விமானசேகரத்தின் மேய
தம்மையும் பணிவித் தெண்ணில்
சராசர மனைத்துயீன்ற
அம்மையங் கயற்கண்ணாளாம்
அணங்கையும் பணிவித்துள்ளம்
செம்மைசெய் தின்பவெள்ளத்
தழுத்தினா சித்தசாமி.

என்று இந்தப்பாட்டை நன்றாய் உணர்ந்து பார்க்கில் உபதேச முறையை அறிந்துகொள்ளலாம்.

115. வினா ஒருஜென்னத்தில் சகலரா யிருந்து ஆட்பட்டவர்களில ஒருவரை யெடுத்துச்சொல்லவேணும்

விடை குமரகுருபரராக தருமபுரத்தில் மாசிலாமணி தேசிகராயிருந்து ஆட்படுத்தியதே.

116. வினா ஆன்மாக்களுக்குத்தான் மலப்பிணியினால்சரீரங்களுண்டாயின நின்மலனாகிய பரமசிவனுக்குச் சரீரமுண்டாவதற்குக் காரணமென்ன

விடை பிள்ளைகளுப் பிதசப்பிணியுண்டானலந்தப் பிணியை நீக்கவேண்டுமென்று பிதாவுக்கு ஆசைப்பிணி உண்டானாற் போலுமே

117. வினா பரமசிவம் ஆன்மாக்களுக்குமலப்பிணியை எந்தக்காலத்தில் நீக்கும்

விடை இருவினையொப்புவந்த காலத்தில்.

118. வினா ஆன்மாக்களுக்கு இருவினை யொப்பு வந்தகாலத்தில் பரமசிவம் மலப்பிணியையெப்படி நீக்கும்

விடை வண்ணான் வத்திரத்திலுள்ள அழுக்கை

உழ மண்ணைக்கொண்டு நீக்குவதுபோல மாயாகருவிகளைகொண்டு நீக்கும்.

119. வினா இருவினை ஒப்பாவது யாது

விடை - ஒருவன் தான்விரும்பப்பட்ட பதார்த்தங்களையும் வெறுக்கப்பட்ட பதார்த்தங்களையுங் கண்டால் விருப்பும் வெறுப் புமற்ற பதார்த்தங்களைக் கண்டாற்போல நல்வினைப்பயனுந் தீவினைப்பயனும் வந்தால் அவ்விரண்டினிடத்தும் விருப்பும் வெறுபுமின்றி நிற்றலே.

120. வினா மலபரிபாகமென்பதுயாது

விடை கற்றாழையானது தனது நாற்றமுங் கசப்பும் பக்குவப் படுத்துகிறவனால் நீங்கவே மனிதர்கள் புசிப்புக்கேற்ற நல்லருசியை உப்பு தயிர் முதலிய சாமான்களால் அடைந்துநிற்பதுபோல ஆன்மா ஆணவமுதலியமலங்களாலுண்டாயிருக்கின்ற வஞ்சனை பொறாமை கோபம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் முதலிய அசுத்த குணங்கள் சிவபுண்ணியத்தால் நீங்கவே அந்த ஆன்மா சுத்தகுணத்தை அருளால் அடைந்துநிற்பதுவே மலபரிபாகம்.

121. வினா இருவினையொப்பின்கண்ணுண்டாகின்ற மலநிவிர்த்திக்குக் காரணம்யாது

விடை அநாதி தொடுத்து மோக்ஷபரியந்தம் ஆன்மாக்களாலுண்டாகின்ற சிவபுண்ணியங்களே காரணம்.

122. வினா சிவபுண்ணியங்கள் எத்தனைவிதம்

விடை மலநிலையென்றும் அருணிலையென்றும் இரண்டுவிதம்.

123. வினா மலநிலை யெத்தனை விதமாகும்

விடை அபுத்தி பூருவ சிவபுண்ணியம் 1 புத்திபூருவ சிவபுண்ணியம் 2 உபாயச்சரிதை 3 உபாயக்கிரியை 4 உபாயயோகம 5 உண்மைச்சரிதை 6 உண்மைக்கிரியை 7 உண்மையோகம 8 உபாயஞானம் 9 இந்த ஒன்பதுமே மலநிலையாம்.

124. வினா அவைகளையேதினாலே மலநிலையென்றுசொல்வது

விடை ஆன்மாக்களாலே செய்யப்படுவன ஆதலால் மலநிலையாம்.

125. வினா [illegible] அபுத்திபூருவ சிவபுண்ணியமென்பதெப்படி

விடை நந்தனவனத்துக்குத் தண்ணீர் இறைப்பது சிவபுண்ணியமென்று அறியாமல் ஒருவன் கூலியினிமித்தம் தண்ணீர் இறைக்கின்றான் அப்படிக்கூலிக்காகச் செய்த வேலை அபுத்திபூருவ சிவபுண்ணியமாகின்றது இப்படியே யெல்லாம் அபுத்திபூருவ சிவபுண்ணியங்களும்.

126. வினா புத்திபூருவ சிவபுண்ணியமென்பதெப்படி

விடை சிவபெருமான் பணிவிடையென்று நினைந்து கூலிபெற்றுக் கொள்ளாமல் தண்ணீர் இறைப்பாராகில் புத்திபூருவ சிவபுண்ணியமாகின்றது இப்படியே புத்திபூருவ சிவபுண்ணியங்களெல்லாம்.

127. வினா சிவபெருமான் பணிவிடையென்று நினையாமல் கூலியை நினைந்து நந்தனவனத்துக்குத் தண்ணீர்இறைத்தவனுக்கு எப்படிச்சிவபுண்ணியமுண்டாகுமென்று சொன்னீர் ஆச்சரியமாயிருக்கின்றது [illegible]த வி

ளக்கும்படி சொல்லுமையா

விடை ஒருவன் கூலியினிமித்தம் ஒருபிராமணனை க்கல்லாலெறிந்துகொல்வானாகில் அவனுக்குப்பாவம் உண்டோ இல்லையோ சொல்லுமையா

128. வினா சரியையென்பது எப்படிப்பட்டதெல்லாம்

விடை சிவாலயங்களில் அதிகாலமே திருவலகிடல் திருமெழுக்சால் மெழுகல் திருவிளக்கிடல் சுத்தனாக நந்தவனத்திற்சென்று தெரிந்து புஷ்பமெடுத்தல் தேமாலையாதி கட்டி யீசன் திருமேனியில் அணிவித்தல் தேவாரம் திருவாசகம் பக்தவிலாசம் ஆகமம் புராணமாகிய இவை முதலியவைகளைப் பாராயணஞ்செய்தல் வில்வ முதலிய புஷ்பச்செடிகளை வைத்துப்பரிபாலனஞ் செய்தல் விபூதி ருத்திராக்ஷம் காஷாயம் இலிங்கம் பஞ்சாக்ஷரமென்னும் இப்பஞ்சமுத்திரையில் ஒருமுத்திரையை யாவது தரித்த சிவனடியார்களைக்கண்டால் பரமசிவத்தை வழிபடுதல்போல் வணங்கி வந்தனை வழிபாடு செய்தல் சிவாலயம் விஷ்ணுவாலயம் பிரம்மாலயம் சாவடி சத்திரம் ஆகிய இவைகளை நூதனமாகச்செய்வித்

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIB.
THIRUVANMIYUR

தல் ஜீரணித்த ஆலயங்களைக்கட்டுவித்தல் தினந்தோறு ம கங்கை முதலிய புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தல் ஆலயங்களில் அங்கப்பிரதக்ஷணம் செய்தல் அடியளந்து நடத்தல் நூற்றெட்டு ஆயிரத்தெட்டு என்னும் தொகைப்படி பிரதக்ஷணம் செய்தலாம்.

129. வினா நல்லது சரிதையைச் சொன்னீர் அதில் உபாயச்சரிதையென்பதெப்படி

விடை மேற்சொல்லிய சரிதைப் பணிவிடைகளை மனம் வாக்குக்காயம் ஒற்றுமை யின்றிச்செய்தலே உபாயச்சரிதையாம்

130. வினா உ

விடை மனம்

ய்வதே.

131. வினா அறுபத்துமூன்று நாயன்மார்களில் அநேகர் சரிதைமார்க்கத்தில் தானே யிருந்திருக்கிறார்கள் அவர்கள் செயலும் மலநிலையாகத்தானே யாகின்றது ஆனால் மலநிலையின் செயலுக்கும் முத்தி கிடைக்குமோ

விடை நல்ல கனிகளைக்கொடுக்கின்ற விருட்சங்களெல்லாம் கொம்பிற பழுப்பது வழக்கமாயிருக்கின்றது ஆனால் பலாவிருக்ஷமோ கொம்பிலும் பழுக்கும் அடி மரத்திலும் பழுசகும் வேரிலும் பழுக்கும் அது போல

நாயன்மார்களும் அவர்களைப்போலொத்தவர்களும் ஞானத்தினாலும் முததியடைவார்கள் யோகசதினாலும் முத்தியடைவார்கள் கிரியையினாலும் முத்தியடைவார்கள் சரிதையினாலும் முத்தி யடைவார்கள் அன்பினை பெருக்கு சாஸ்த்திர விவகாரத்திலமையாது.

132. வினா கிரியையென்பதெப்படி

விடை நீர் சரிதைப்பணிவிடையில் மனம்பற்றிச்செய்துவந்ததின் பேரில் கிரியையைப்பற்றியும் யோகத்தைப்பற்றியும் நிஷ்டானுபூதிமுதலிய சாஸ்திரங்களிற் சொல்வதைப் பார்த்துககொள்ளும்.

133. வினா உபாய ஞானமென்பதைப் பற்றியும் மேலே உத்தரவு செயததுபோலே செய்யாமல் கிருபை கூர்ந்து விடைகொடுக்கவேணும்.

விடை துறவுசாஸ்திர முதலிய ஞானநூல்களை வாசித்து அப்படி துறப்பதற்கு மனந்துணியாமலும் துறந்தோர் பெருமையை வாயினாலேபேசிக்கொண்டும் இல்லறத்தை விடுவதற்கு மனம ஒர்மைப்படாமலும் இல்லறத்திலிருந்தானே யனுபவிப்பதற்கு மனம் திரப்தியடையாமலும் இருப்பதுவே உபாயஞானம்

134. வினா மனநிலையைச்சொன்னீர் இனி அருணிலையைச்சொல்லும்

விடை அருணிலையென்பது உண்மை ஞானம்.

135 வினா உண்மைஞானம் எத்தனை விதமாகும்

விடை பத்துவிதமாகும்

136. வினா அந்தப்பத்தையும் ஒவ்வொன்றாகச் சொல்லுமையா

விடை தத்துவரூபம் 1 தத்துவதரிசனம் 2 தத்துவசுத்தி 3 ஆத்மரூபம் 4 ஆத்மதரிசனம் 5 ஆத்மசுத்தி 6 சிவரூபம் 7 சிவதரிசனம் 8 சிவயோகம் 9 சிவபோகம் 10 ஆக இந்தப்பத்துமே அருணிலையென்று சொல்லப்படுகின்ற உண்மைஞானம்

137. வினா தத்துவரூபமாவதெப்படி

விடை தத்துவகுணங்களை யறிதலாம் எப்படியெனில்

அவன்பாடினதைக்கேட்டது எனது செவி இன்று நாற்பதுமயில் நடந்தது எனதுபாதம். இந்தச் சித்திரத்தை எழுதினது எனது பாணி. அவனோடு சண்டை செய்தது எனது அங்காரமும் வாக்கும் நாவும். கோவிலுக்குப் போகவேண்டு மென்று நினைத்தது எனதுமனம் இந்தப்புத்தகத்தைக் கற்றுக்கொண்டது எனது புத்தி. மேகத்தைப்பார்த்தது எனது கண். இப்படியே ஒவ்வொன்றையும் ஒரு தத்துவந் தனித்தாவது பலதத்துவங்கள் சேர்ந்தாவது செய்தனவென்று தத்துவங்களின் குணங்களையறிதலே தத்துவரூபமாம்.

138. வினா தத்துவதரிசனமாவது எப்படி

விடை ஆத்மாவாகிய தன்னிலே தத்துவங்கள் ஜீவித்தலை யறிந்து கொள்வதே

அதாவது தத்துவங்கள் ஆத்மாவை ஆதாரமாகக் கொண்டு ஜீவிக்கின்றனவேதவிர ஆத்மாவானது தத்துவங்களை ஆதாரமாகக்கொண்டு ஜீவிக்கவில்லை

எப்படியெனில்

கால் கை செவி இப்படிப்பட்ட எந்தத்தத்துவமா வது பிரிந்துபோனால் அதனால் ஆத்மா கெட்டுப்போக மாட்டாது ஜீவித்துக்கொண்டேயிருக்கும் சில பிரதா னதத்துவங்களாகிய நாவு குடல் முதலானவை கெட் டுப்போனால் ஆன்மாவானவன் அந்தத்தேகததைவிட்டு ப்பிரிந்துபழயவஸ்திரத்தைக்கழைந்துப்போட்டுப் புதி யவஸ்திரத்தைத் தரித்துக்கொள்வது போல வேறு தேகத்தை யெடுத்துககொண்டு ஜீவிப்பன் இதுபோல ஒரு தேகத்திலிருந்து ஆன்மா பிரிந்துபோனால் வேறு ஆன்மாவைத் தனககுள் தங்கும்படி செய்துகொண்டு தேகம் ஜீவிக்கமாட்டாது

ஆகலால் ஆத்மாவாகிய தன்னிலேதான் தத்துவங் கள் ஜீவிககின்றனவென்று அறிந்து கொள்ளுதலே த த்துவ தரிசனமாம்.

139. வினா தத்துவசுத்தியாவது எப்படி

விடை ஆத்மாவாகிய தான்வேறு தத்துவங்கள் வேறு இவ்வளவே தவிர ஆன்மாவாகியதானும் தத்து வங்களுஞ் சேர்ந்த சமஷ்டியே தானென்பதில்லையெ

ன்று அறிந்து நீங்குதலே தத்துவசுத்தி.

140. வினு ஆத்மரூபமாவது எபபடி

விடை ஆதமஞானமென்னும அறிவே அதன்வடி வென்றறிந்துகொள்ளல்

141. வினு ஆதமதரிசனமாவது எப்படி

விடை தத்துவங்களை அறிந்து நீஙகி அவைகளி னின்று நீஙகினஅறிவே ஆதமாவாகிய நான்என்று அறிந்துகொள்ளலே ஆத்மதரிசனமாம்.

142. வினு ஆத்மசுத்தியாயது எப்படி

விடை ஆதமசுத்தியைச் சொல்லுமிடத்து ஆத் மாவாகிய தான்சிவனாலே சர்வதத்தையு மறிந்து வருமு றைமையையும் ஆதமாவாகிய சனசுத்தானேயறியுமு றமையை அவன் கொடானெனபதுங்கண்டு சிவனு டைய ஞானஞ் சீவிககுமென்றறிந்துதான் மலமுமாக மல் சிவனுமாகாமல் நிற்கிற இடமே ஆத்மசுத்தியாம்.

143. வினு சிவரூபமாவதெப்படி

விடை சிவன் இச்சாஞானக்கிரியா சொரூபனுயி

ருந்து ஆத்மாக்கள் செய்யப்பட்ட அநாதி கருமங்களி னைதனையும் திருவுள்ளத்தடைத்திருந்து அந்தந்தகருமங் களினை ஜையும் அந்தந்த ஆன்மாக்களின் பக்குவமறி ந்து கூட்டிப் புசிப்பித்துத் தொலைப்பித்த சருளுதலே சிவரூபம.

144 வினா சிவதரிசனமாவ தெப்படி.

விடை ஆத்மாவாகியதான கருமங்களைப் புசிக்கு மிடத்துப் பாயசிவம் தனக்குமுன்னறுகையாக நின்று உபகரிக்கும.

எப்படியென்றால்

அவன் அவள் அது முன்னிலையாகநின்று உபகரி க்கும் இப்படிநடத்தமிடத்துத் தனக்குத்தோன்றுகின்ற அவன் அவள அது என்கின்ற மூவகையும் ஒழிந்து அவையிடமாக நின்ற சேஷ்டிப்பித்துத் தான அந்தக்க ருமத்தைப்புசிக்குமிடத்துத் தன்னிடத்து மறைந்துநி ன்று இந்திரியங்களையுந் தன்னையுஞ் சேஷ்டிப்பித்துத் தனக்கு அந்தக் கருமம் புசிக்கும்படி செய்து இடைவி டாமல் ஊட்டுகிற நியத்தைப் பார்ப்பதுவே சிவதரி சனமாம்.

115. வினா சிவயோகமாவதெப்படி

விடை மனம் வேறொன்றிலுஞ்செல்லாமல் சிவத்தில் இரண்டறக்கலந்திருத்தலே சிவயோகம்.

116. வினா சிவபோகமாவதெப்படி

விடை முன்சொல்லியபடி இரண்டறக்கலக்கவே பராசத்தியினிடமாக நின்று அனுபவசத்துடன் கலந்து சிவானுபவம் பிறக்கும் அப்படிப்பிறக்கவே அக்கினியுஞ் சூடும் போலவும் தண்ணீருங் குளிர்ச்சியும் போலவும் பரமசிவத்தில் அழுந்துதலே சிவபோகமாம்.

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ள மு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நில வியுலகெலாம்.

முற்றிற்று.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 11 | 14 | பேல | போல |
| 17 | 17 | ஆநாய்ச்சி | ஆராய்சசி |
| | 18 | ஷை | ஷை |
| 23 | 2 | அரசனெ | அரசனை |
| 46 | 1 | சூழ்கினெனெ | சூழ்கின்றார்கள் |
| 39 | 5 | யுய்யுவர் | யுப்வா |
| 40 | 3 | சான் திரகள் | சாஸ்திரங்கள் |
| | 19 | பசோயல் | பேசாமல் |
| 41 | 7 | சனவில் | கனவில் |
| 43 | 1 | கொண்டும் | கொண்டு |
| | 2 | ஒன்பதை | ஒன்பதையும |
| | 16 | டைத்து | டைசது |
| 21 | 16 | திரைருச்சனை | திவாருசசனை |
| 22 | 7 | ஆபத்தம் | ஆபதசம் |

| | | | |
|---|---|---|---|
| 54 | 13 | பரிக்ஷிப்ப | பரீக்ஷிப்ப |
| 57 | 3 | தென்று | தெனல் |
| 58 | 13 | யுடைவர் | யுடையவர் |
| 60 | 9 | கிரைய | கிரய |
| 64 | 16 | நிறைவேறிரு | நிறைவேறியிரு |
| 66 | 4 | நிலமட்டு | நிலமட்டு |
| 67 | 1 | கொணடு | கொண்டு |
| 69 | 3 | வருகேக்கும் | வருவிக்கும் |
| 70 | 3 | வரம்புயத்துயர்சகு | வரம்புபரத்துக்கு |
| 71 | 11 | நதியில | நதியில் |
| 72 | 2 | அடஙகிமிருக்கிறன | அடங்கி யிருக்கிறன் |
| 72 | 16 | பேசியதைப்பற்றி | பேசியதையபப |
| 73 | 18 | போவத்தல் | போவித்தல் |
| 75 | 10 | புத்தகதை | புத்தகத்தை |
| 76 | 1 | சைவ | சைவ |

| | | | |
|---|---|---|---|
| 79 | 13 | வன்றழை | வன்றிளி |
| 80 | 10 | பெரியவ | பெரியவர் |
| | 12 | யாரவது | யாரவது |
| 82 | 1 | தெசிசருக்கு | தேசிகருககு |
| 83 | 4 | வீடடை | வீடடை |
| | 11 | எங்கிருன்றனர் | எங்கிருக்கின்றனர் |
| | 18 | தானெள்பது | தானென்பது |
| 84 | 14 | த்மக்கு | தமக்கு |
| | 16 | முற்றிருத்தனர் | முற்றிருந்தனர் |
| 85 | 9 | சாதறிசகொண்டு | சாந்த்திகொண்டு |
| | 11 | ஞாஞசிய | ஞாஞசிரிய |
| | 18 | குறிபபுளதணர்த்தி | குறிப்புளத்துணர்த்தி |
| 86 | 1 | கொள்ளகூடும் | கொள்ளக்கூடும் |
| | 7 | உன்க்கு | உனக்கு |
| 87 | 3 | சோல்ல | சொல்ல |
| | 11 | ப்ரமசிவ | பரமசிவ |

| | | | |
|---|---|---|---|
| 83 | 2 | ஆணலமலம் | ஆணவமலம் |
| | 8 | இயற்லை | இயற்கை |
| | 17 | கழிம்பு | களிம்பு |
| 91 | 7 | புசிப்பர் | புசிப்பிப்பர் |
| 95 | 15 | உஎமைய | உரிமை |
| 98 | 2 | கொடுத்தராலும் | கொடுத்தாலும் |
| | 10 | தொழிலொறு | தொழிலொன்று |
| 99 | 03 | உதிஞல் | எதிஞல் |
| 101 | 5 | புசிப்பிப்பர் | புசிப்பர் |
| | 7 | ஷை | ஷை |
| | 16 | தகுத்தாராய்தலாலே | பகுத்தாராய்தலே |
| 102 | 17 | சொல்விய | சொல்லிய |
| 105 | 1 | ஆன்மாகளுக்கு | ஆன்மாக்களுக்கு |
| 1'0 | 4 | சேதேனுண்டோ | யேதேனுமுண்டோ |
| 118 | 13 | சாதிககொண்டு | சாததிககொண்டு |
| 119 | 18 | ஷை | ஷை |
| 121 | 5 | ஆட்கெண்டதை | ஆட்கொண்டதை |
| 122 | 9 | ஆனசுப்பிணி | ஆசைப்பிணி |
| 123 | 8 | வெறுபுமிறி | வெறுப்புமின்றி |
| 124 | 1 | சண்ணாண் | கண்ணாண் |
| 128 | 14 | சாஸ்திரஙக் | சாஸ்திரஙக |

DR U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS